بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 46

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - ஜமாதில் அவ்வல் 01★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - நுபுவ்வத் 16 ★ 16 நவம்பர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَمَّا مَنۡ اٰمَنَ وَعَمِلَ صَالِحًا فَلَہٗ جَزَآءَ ۨالۡحُسۡنٰی ۚ وَسَنَقُوۡلُ لَہٗ مِنۡ اَمۡرِنَا یُسۡرًا ﴿۸۹﴾

**பொருள்**

நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களுக்கு சிறந்த நற்கூலி உண்டு. நிச்சயமாக நாம் அவருக்கு எம் கட்டளை மூலம் எளிய (வார்த்)தைக் கூறுவோம்.

(அல் கஹ்ஃப்: 89)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எந்த ஈமான் அபூபக்ர் (ரலி) மற்றும் ஸாஹபிகளிடம் இருந்ததோ அந்த ஈமானை நீங்கள் உங்களிடத்தில் உருவாக்குங்கள் என்று நான் உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன். அதில் அழகிய எண்ணமும், பொறுமையும் உள்ளது. மேலும் அது ஏராளமான அருட்களையும் கனிகளையும் வழங்கக் கூடியதாகும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கூற்று

எழுதப்பட்டுள்ளது: அன்னார் (ரலி) வியாபாரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) இன்னும் மக்காவை வந்தடைந்திருக்கவில்லை. அப்போது வழியிலேயே ஒரு நபரை சந்தித்தார்கள். புதிய செய்தி ஏதும் இருந்தால் சொல்! என்று அவரிடம் கேட்டார்கள். அவர் கூறினார்: புதிய செய்தி வேறு எதுவும் இல்லை; ஆயினும், உங்களுடைய நண்பர் நபித்துவ வாதம் செய்திருக்கின்றார் என்ற செய்தி உறுதியாகும். அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கேயே நின்று கொண்டு கூறினார்கள்: அவர் இந்த வாதத்தை செய்திருக்கின்றார் என்றால் பின்னர் அது உண்மையாகும். ஆக, மக்காவை சென்றடைந்த போது அன்னார் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சென்று சந்தித்தார்கள். மேலும், தாங்கள் உண்மையில் நபித்துவ வாதம் செய்திருக்கின்றீர்களா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். ஆம், என்று அன்னார் (ஸல்) கூறியபோது அந்த தருணத்திலேயே அன்னார் (ரலி) இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு எந்தவோர் அற்புதத்திற்கும் அவசியம் ஏற்படவில்லை. தனிப்பட்ட முறையில் அறிமுகம் இல்லாத நபர்களே அற்புதத்தை விரும்பக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால், எவருக்கு தனிப்பட்ட அறிமுகம் இருக்குமோ அவருக்கு அற்புதத்திற்கான தேவையும், அவசியமும் இருப்பதில்லை. இதன் காரணமாகவே ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் எந்த அற்புதத்தையும் வேண்டவில்லை. ஏனெனில், அன்னார் (ரலி) இறைத் தூதர்(ஸல்) அவர்களின் நிலைமைகளை மிகவும் நன்றாக அறிந்திருந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) இறையச்சமுடையவர் மற்றும் நம்பிக்கைக்குரியவர் என்பதையும், அன்னார் (ஸல்) பொய்யரும், இட்டுக்கட்டுபவரும் இல்லை என்பதையும் அன்னார் (ரலி) மிகவும் நன்றாக அறிந்திருந்தார்கள். எந்த மனிதன் மீதும் ஒருபோதும் இட்டுக்கட்டாதபோது பின்னர் அவர் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுவதற்கு ஒரு போதும் துணியமாட்டார்.

எனவே இந்த விஷயம் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். அதாவது, , அநேகமாக பொய்யுரைத்து இருப்பாரோ என்ற சந்தேகம் ஏற்படும் காரணத்தினால்தான் அடையாளம் வேண்டப்படுகின்றது. ஆனால், வாதி உண்மையாளர் மற்றும் நம்பிக்கைக்குரியவர் ஆவார் என்பதை மிக நன்றாக அறிந்திருக்கும்போது பின்னர் அடையாளம்

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

## நபிமொழி

### மது ஹராமாக்கப்படுவதற்கு முன்னர் மது அருந்தியவர்கள்

(2464) ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் வீட்டில் (ஒரு சபையில்) மக்களுக்கு மது அருந்தக் கொடுத்துக் கொண்டிருந்தேன். மேலும், அந்த நாட்களில் அவர்களுடைய மது பேரீத்தம் பழங்களால் தயார் செய்யப்பட்டிருந்தது. கவனமாக கேளுங்கள்! மது ஹராமாக்கப்பட்டு விட்டது என்று நீங்கள் அறிவிப்பு செய்யுங்கள் என இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஓர் அறிவிப்பாளருக்கு கட்டளை வழங்கினார்கள். (ஹஸ்ரத் அனஸ்(ரலி) அவர்கள்) கூறி வந்தார்கள்: அப்போது வெளியில் செல்லுங்கள்; மற்றும் அதனை உடைத்து விடுங்கள் என்று என்னிடம் தல்ஹா(ரலி) அவர்கள் கூறினார்கள். நான் வெளியில் சென்றேன்; மேலும் அதனை உடைத்து விட்டேன். மேலும் அது மதீனாவின் வீதிகளில் பெருக்கெடுத்து ஓடியது. சில மக்கள் கூறத் தொடங்கினர்: தங்களுடைய வயிறுகளில் மது இருக்கின்ற நிலையில் பல நபர்களும் கொலை செய்யப்பட்டிருந்தனர். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்: ஈமான் கொண்டு, நற்செயலாற்றி வருகின்ற அந்த மக்கள் மீது அவர்கள் முன்னரே உண்டு பருகியவற்றின் காரணமாக அவர்கள் மீது எந்த பாவமும் இல்லை.

விளக்கம்: ஹஸ்ரத் ஸய்யது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மது ஹராமாக்கப்பட்டு விட்டதாக அறிவிப்பு செய்யப்பட்டபோது எழுந்த ஓர் இயல்பான கேள்வி இதுவாகும். அதாவது, பத்ர் போர் மற்றும் உஹது போரில் சில ஸஹாபிகள் ஷஹீதாகினர்; மேலும், அவர்களின் வயிற்றில் மது போன்ற ஹராமாக்கப்பட்ட பொருள் இருந்தது.

இறைவனின் வஹீ இந்த சந்தேகத்தை அகற்றிவிட்டது. மேலும், அல்லாஹ் கூறினான்: எவர்கள் ஈமான் கொண்டு நற்செயலாற்றினார்களோ அவர்கள் முன்னர் உண்டதன் காரணமாக அவர்கள் மீது எந்த பாவமும் இல்லை. அவர்கள் இறையச்சத்தை மேற்கொண்டு நற்செயலாற்றி வந்தால் அவர்கள் மீது எந்த பாவமும் இல்லை. பின்னர் இறையச்சத்தை மேற்கொண்டனர்; மேலும் ஈமான் கொண்டனர். பின்னர் இறையச்சத்தை மேற்கொண்டனர். மேலும் தமது ஈமான் மற்றும் அமல்களை உச்சம் பெறச் செய்தனர். மேலும், அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (அல்மாயிதா: 94)

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர யாரும் முழுமையான அடியார் இல்லை. இதற்கு முன்னர் எவருக்கும் கொடுக்கப்பட்டிராத அந்த ஞானம் இந்த நபியின் மூலமாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

وَقُلۡ رَّبِّ زِدۡنِیۡ عِلۡمًا

**என்ற துஆ இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. பொருள்: இறைவா! எனது ஞானத்தை அதிகரிக்கச் செய்வாயாக என்று முஹம்மதே! நீர் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருப்பீராக!**

فَوَجَدَا عَبۡدًا مِّنۡ عِبَادِنَاۤ اٰتَیۡنٰہُ رَحۡمَۃً مِّنۡ عِنۡدِنَا وَعَلَّمۡنٰہُ مِنۡ لَّدُنَّا عِلۡمًا ﴿۶۶﴾

பொருள்

அப்போது அவர்கள் எம்(மால் தேர்ந்தெடுக்கப்பட்ட) அடியார்களுள் மகத்தான ஓர் அடியாரை (அங்கு) கண்டனர். நாம் அவருக்கு எம்மிடமிருந்து அருளை வழங்கியிருந்தோம். நாம் அவருக்கு எம்மிடமிருந்தே (சிறப்பான) ஞானத்தையும் அளித்திருந்தோம். (18:66)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்: عَبۡدًا مِّنۡ عِبَادِنَاۤ

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அப்துன் என்ற சொல்லால் நினைவுகூரப்பட்டுள்ளது. சூரா ஜின்னில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

وَّاَنَّہٗ لَمَّا قَامَ عَبۡدُ اللّٰہِ یَدۡعُوۡہُ کَادُوۡا یَکُوۡنُوۡنَ عَلَیۡہِ لِبَدًا ﴿۲۰﴾

பொருள்: அல்லாஹ்வின் அடியார் (ஆகிய முஹம்மது நபி) அவனை வேண்டிக் கொண்டு நிற்கும்போது

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்யும்படி தனது தீய கவிதைகளின் மூலமாக மக்களை தூண்டி விட்டு வந்த இஸ்லாத்தின் எதிரியான யூதன் அபூ அஃபக்கின் கொலை சம்பவம் தொடர்பாக ஆதாரப்பூர்வமான ஆய்வுகள்**

**எந்த அடிப்படையில் பார்த்தாலும் இந்த சம்பவம் சரியானதாக நிரூபணம் ஆகவில்லை. நமக்கு ஆய்விலிருந்து இவ்வாறே தெரிய வருகின்றது. ஒன்று, ஒரு மறைமுகமான இஸ்லாத்தின் எதிரி இந்த சம்பவத்தை ஒரு முஸ்லிமின் மீது சுமத்தி இந்தக் கதையை எடுத்துரைத்திருக்கின்றான்; பின்னர் அது முஸ்லிம்களின் அறிவிப்புகளிலும் இடம் பெற்று விட்டது ; அல்லது எங்களது கோத்திரத்தைச் சார்ந்த நபர்கள் துன்பம் கொடுத்து வந்த சில காஃபிர்களை கொன்று விட்டனர் என்று ஒரு பலவீனமான முஸ்லிம் இந்த தனது கோத்திரத்தின் பொய்யான பெருமிதத்தை பெறுவதற்காக இந்தக் கதையை உருவாக்கியிருக்கின்றார். இவ்வாறு இந்த அறிவிப்புகளை வரலாற்றில் சேர்த்துவிட்டனர்**

**நமக்கு இக்காலத்தின் இமாமை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இது அல்லாஹ் நம் மீது செய்த கருணையாகும். ஒவ்வொரு விஷயத்தையும் நாம் பார்த்து, ஆய்வு செய்து மேலும் அதன் உண்மைத்துவத்தை புரிந்து பின்னர் எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்கின்றோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சுமத்தப்படும் எந்தவொரு ஆட்சேபனைக்கும் மறுப்பு கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றோம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 அக்டோபர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அகாஃ** மாதம் **06ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் அஸ்மா கொல்லப்பட்ட சம்பவத்தை எடுத்துக் கூறியிருந்தேன். இதே போன்ற மற்றொரு சம்பவம் உள்ளது என்றும் நான் கூறியிருந்தேன். இரண்டாவது சம்பவமும் ஒரு இட்டுக்கட்டப்பட்ட கதையாகவே தெரிகின்றது. இந்த இரண்டாவது சம்பவம் யூதன் அபூ அஃபக்கைக் கொன்ற சம்பவம் ஆகும். வரலாற்று நூல்களில் இன்னொரு கற்பனை சம்பவம் - இங்கு எழுதப்பட்டுள்ளது. வரலாற்று நூல்களில் யூதன் அபூஅஃபக் கொல்லப்பட்டான் என்று மற்றொரு கற்பனை சம்பவம் எடுத்துரைக்கப்படுகிறது.

எடுத்தரைக்கப்படும் அந்த சம்பவத்தின் விவரம் இவ்வாறாகும்: ஒருநாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் இவ்வாறு கேட்டார்கள்: எனக்காக இந்தக் கீழ்த்தரமானவனை அதாவது, அபூஅஃபக்கை யாரால் சமாளிக்க முடியும்? அதாவது, யாரால் அவன் கதையை முடிக்க முடியும்? அவனைக் கொல்ல முடியும்?

அபூ அஃபக் எனும் இவன் மிகவும் வயது முதிர்ந்தவனாக இருந்தான். அவனுக்கு 120 வயது ஆகிவிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால், இவன் மக்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தூண்டி விட்டு வந்தான். மேலும், தன்னுடைய கவிதைகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தீயச் சொற்களைக் கூறியும் அவமரியாதை செய்தும் வந்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலின் பேரில் ஹஸ்ரத் ஸாலிம் பின் உமைர் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். இவர்கள் அல்லாஹ்வின் மீதான அச்சத்தில் மிகவும் அதிகமாக அழுது வந்தவர்களில் ஒருவர் ஆவார்கள். பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் பணிவுடன் கூறினார்கள்: நான் உறுதி எடுத்துக் கொள்கிறேன். ஒன்று அபூ அஃபக்கைக் கொன்று விடுவேன்; இல்லையென்றால் இந்த முயற்சியில் எனது உயிரை விட்டு விடுவேன். ஆக, இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஸாலிம் பின் உமைர் சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இரவு நேரமாக இருந்தது. கடுமையான வெப்பம் இருந்தது. அபூ அஃபக் தனது வீட்டிற்கு வெளியில் இருந்த முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் ஸாலிம் அவர்களுக்கு இதைப் பற்றி தெரிய வந்ததும், அவரக்ள் உடனடியாக புறப்பட்டார்கள். அங்கு சென்றடந்து ஹஸ்ரத் ஸாலிம் அவர்கள் தமது வாளை அபூ அஃபக்கின் கல்லீரலில் வைத்தார்கள். அதில் முழு அழுத்தம் கொடுத்தார்கள். எதுவரை என்றால், வாள் அவனது வயிற்றைத் தாண்டி படுக்கையில் சென்று தைத்தது.

அத்துடன் இறைவனின் எதிரி அபூ அஃபக் பயங்கரமாக கத்தினான். ஹஸ்ரத் ஸாலிம் அவர்கள் அவனை அதே நிலையில் விட்டு விட்டு அங்கிருந்து திரும்பி வந்தார்கள். அபூ அஃபக்கின் கதறல் சப்தம் கேட்டு உடனடியாக மக்கள் ஓடி வந்தார்கள். அவனுடைய சில கூட்டாளிகள் அப்பொழுதே அவனை வீட்டிற்குள் தூக்கிச் சென்றார்கள். ஆனால், இறைவனின் அந்த எதிரி அந்தக் காயத்தைத் தாங்க முடியாமல் மரணித்து விட்டான். இந்த சம்பவம் ஒரு வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது.

இந்த சம்பவமும் நம்பந்த்தகுந்த எந்தச் சான்றிலும் அறிவிக்கப்படவில்லை. ஸிஹாஹ் ஸித்தா எனப்படும் ஆறு ஹதீஸ் நூல்களிலும் இது குறிப்பிடப்படவில்லை. சில வரலாற்று நூல்களில் இந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, ஸீரத் ஹல்பியா, ஷரஹ் ஸர்கானீ, தபக்காத்துல் குப்ரா, இப்னு ஸஃது, ஸீரத்துன் நபவிய்யாஹ் இப்னு ஹிஷ்ஷாம், அல்பிதாயா வன் நிஹாயா, கிதாபுல் மாகஸீ, அல் வாக்தீ, ஸூபுலுல் ஹுதா வர் ரஷாத் முதலியவற்றில்.

ஆனால், பெரும்பாலான வரலாற்று நூல்களில் இந்த சம்பவம் குறிப்பிடப்படவில்லை. உதாரணமாக, அல் காமில் ஃபித்தாரீக், தாரீக் தபரீ, தாரீக் இப்னு குல்தூன் முதலியவை. ஆனால் வரலாற்றின் சில நூல்களில் உதாரணமாக முன்னர் கூறப்பட்டது போன்று இந்த சம்பவம் பதியப்பட்டுள்ளது.

அஸ்மா சம்பவம் போன்று இந்த சம்பவம் தொடர்பாகவும் இவ்வாறு சாட்சி பகரப்படுகின்றது; அவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக பகைமையில் மக்களைத் தூண்டி விட்டு வந்தான். பத்ர் யுத்தத்திற்குப் பிறகு இவன் பொறாமையிலும், காழ்ப்புணர்ச்சியிலும் மேலும் முன்னேறிவிட்டான். மேலும், மிகவும் பகிரங்கமாக கிளர்ச்சியாளன் ஆகிவிட்டான்.

அபூ அஃபக் கொல்லப்பட்ட சம்பவத்தின் அறிவிப்பின் உட்புற வேறுபாடுகளும் இந்த சம்பவத்தை சந்தேகத்திற்குரியதாக ஆக்கி விடுகின்றது. உதாரணமாக, ஒன்று கொன்றது யார்? என்பதில் உள்ள முரண்பாடு; இப்னு ஸஃது மற்றும் வாக்தீயின் பார்வையில் அபூ அஃபக்கைக் கொன்றவர் ஸாலிம் பின் உமைர் ஆவார். ஆனால், மற்ற பிற அறிவிப்புகளிலோ ஸாலிம் பின் உமர் என்று கூறப்பட்டுள்ளது. இப்னு உக்பா அவர்களின் பார்வையிலோ அவனை ஸாலிம் பின் அப்துல்லாஹ் பின் ஸாபித் அன்ஸாரி அவர்கள் கொன்றார்கள்.

இரண்டாவதாக, கொலைக்கான காரணத்தில் முரண்பாடு உள்ளது. இப்னு

ஹிஷ்ஷாம் மற்றும் வாக்தீயின் பார்வையில் அவர்கள் தாமே ஆத்திரமடைந்து அவனைக் கொன்றார்கள். ஆனால், சில அறிவிப்புகளின் அடிப்படையிலோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின் பேரில் அவன் கொல்லப்பட்டான். இப்னு ஹிஷ்ஷாம் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: மதத்தின் வேறுபாடு பற்றிய ஒன்று, மூன்றாவது விஷயமாகும். இப்னு ஸஃது அவர்களின் பார்வையில் அபூ அஃபக் ஓர் யூதனாக இருந்தான். ஆனால், வாக்தீயின் பார்வையில் இவன் யூதனாக இருக்கவில்லை. பிறகு கொலை நடந்த நேரத்திலும் முரண்பாடு உள்ளது. வாக்தீ மற்றும் இப்னு ஸஃது ஆகியோரின் பார்வையில் இந்த சம்பவம் அஸ்மா பின்த் மர்வான் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பிறகு நிகழ்ந்த சம்பவம் ஆகும். ஆனால், இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோரின் பார்வையில் இந்த சம்பவம் அஸ்மா கொல்லப்பட்டதற்கு முன்னர் நிகழ்ந்ததாகும்.

இந்தத் தெளிவான முரண்பாடுகளிலிருந்தும் இந்த சம்பவம் வெறும் புனையப்பட்ட கதையாகும்; கட்டுக்கதையாகும்; இதற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை என்பது வெளிப்படுகின்றது. ஒரு கற்பனைக்கு ஏற்றுக் கொண்டாலும் கூட அரசாங்கத்தின் தலைவரைக் கொலை செய்வதற்கு தூண்டி விடுவது, இழிவுபடுத்தும் வகையிலான கவிதைகளைக் கூறி போருக்கு எழுச்சியூட்டுவது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பது மற்றும் போர் தீயை மூட்டுவது ஆகிய அவனுடைய பிற குற்றங்களே மரண தண்டனைக்குப் போதுமானவையாகும்.

இவ்வாறிருக்க இன்றைய நாட்களிலும் மரண தண்டனை வழங்கப்படுகின்றது. அதாவது அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தது நிரூபணமாகிவிடும்போது. ஏசி பேசுவது மட்டும் இந்தக் கொலைக்கு காரணமாக இருக்க முடியாது. இவ்வாறே அஸ்மாவின் சம்பவத்தைப் போன்று இங்கும் அபூ அஃபக் கொல்லப்பட்டதற்குப் பிறகு யூதர்களிடமிருந்து எந்த எதிர் நடவடிக்கையும் (மேற்கொள்ளப்பட்டதாக) நிரூபணமாகவில்லை.

அவன் கொல்லப்பட்டதற்கு யூதர்கள் தரப்பிலிருந்து ஏதாவது எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எந்த எதிர் நடவடிக்கையும் நிரூபணமாகவில்லை. எனவே இவர்கள் மௌனமாக இருந்தது, இந்த சம்பவம் கற்பனையானது என்பதற்கு வலிமையான ஆதாரமாகும்.

இந்த விஷயம் நினைவிற் கொள்ளத் தக்கது. அதாவது, இந்த சம்பவங்கள் நிகழ்ந்த காலம் பத்ர் யுத்தத்திற்கு முன்னர் அல்லது சற்றே பிறகான காலம் என்று எடுத்துரைக்கப்படுகின்றது. இது முன்னதாக நடந்தது அல்லது (பத்ர் யுத்தம் முடிந்த) உடனேயே நிகழ்ந்தது.

முஸ்லிம்கள் மற்றும் யூதர்களுக்கு இடையிலான முதல் மோதல் பனூ கைன்கா போர்தான் என்பதில் வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒருமித்திருக்கின்றார்கள். போருக்கு முன்னரும் ஏதாவது சம்பவம் நடந்திருந்தால், இவ்வாறு சம்பவம் நடந்தது என்று அவர்கள் அதன் கீழ் அதனை குறிப்பிட்டிருப்பார்கள். மேலும், அபூ அஃபக் மற்றும் அஸ்மா கொல்லப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் செயல் ரீதியான சீண்டலில் தங்களை முற்படுத்திக் கொண்டார்கள் என்று பொருத்தமான முறையில் முஸ்லிம்கள் மீது யூதர்கள் ஆட்சேபனை செய்திருக்க முடியும். ஆனால், மதீனத்து யூதர்கள் இந்த சம்பவங்களை எடுத்துக் கொண்டு இப்படி ஒரு கேள்வியை எழுப்பியதாக எங்கும் குறிப்பு கிடைப்பதில்லை.

ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அஸ்மா மற்றும் அபூ அஃபக் கொல்லப்பட்ட கற்பனை சம்பவத்தை பற்றி எடுத்துரைத்தவாறு ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: பத்ர் யுத்தத்தின் நிலைமைகளுக்குப் பிறகு(ள்ளவை என்று), வாக்தீ மற்றும் பிற வரலாற்றாசிரியர்கள் எப்படிப்பட்ட இரண்டு சம்பவங்களை எழுதியுள்ளார்கள் என்றால், அவற்றிற்கு ஹதீஸ் நூல்களிலும் சரியான வரலாற்று அறிவிப்புகளிலும் தடயம் கிடைப்பதில்லை.

அறிவிப்பூர்வமாகப் பார்த்தாலும் அவை சரியானவையாக நிரூபணமாவதில்லை. ஆனால், இவற்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக வெளிப்படையில் ஓர் ஆட்சேபனைக்கான தோற்றம் உருவாகி விடுகின்றது. எனவே, சில கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் தங்களது வழக்கப்படி முற்றிலும் விரும்பத்தகாத வகையில் இவற்றை எடுத்துரைத்துள்ளார்கள்.

இந்தக் கற்பனை சம்பவங்கள் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன: மதீனாவில் அஸ்மா என்ற ஒரு பெண் வாழ்ந்து வந்தாள்- இங்கு அஸ்மாவைப் பற்றி மீண்டும் கூறப்படுகின்றது - அவள் இஸ்லாத்திற்குக் கடுமையான எதிரியாக இருந்தாள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக அதிகம் விஷத்தைக் கக்கி வந்தாள். மேலும், கோபமூட்டக் கூடிய தன்னுடைய கவிதைகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக மக்களை அதிகமாக தூண்டி விட்டு வந்தாள். அன்னாரைக் கொல்லுமாறு தூண்டி விட்டு வந்தாள்.

கடைசியில் ஒரு கண்பார்வையற்ற ஸஹாபி ஹஸ்ரத் உமைர் பின் அதீ (ரலி) அவர்கள் சினங் கொண்டு இரவு நேரத்தில் அவளது வீட்டில் அவள் உறங்கிக் கொண்டிருந்தபோது அவளைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரிய வந்தபோது அன்னார் அந்த ஸஹாபியைக் கண்டிக்கவில்லை. மாறாக, ஒருவகையில் அவர் செய்த செயலைப் புகழ்ந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

இரண்டாவது சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது - அவரது செயலைப் புகழ்ந்தார்கள் என்பதன் பொருள் உண்மையாகப் புகழ்ந்தார்கள் என்பதல்ல. எடுத்துரைக்கப்படும் இந்த சம்பவம் தவறானது என்பதை நான் முன்னர் நிரூபித்து விட்டேன்.

இரண்டாவது சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அபூ அஃபக் எனும் பெயரைக் கொண்ட ஓர் யூதக் கிழவன் மதீனாவில் வாழ்ந்து வந்தான். இவனும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக கோபமூட்டக் கூடிய கவிதைகளைக் கூறி வந்தான். மேலும், நிராகரிப்பாளர்களை அன்னாருக்கு எதிராக போர் புரிவதற்கும் அன்னாரைக் கொன்று விடுவதற்கும் தூண்டி விட்டு வந்தான். கடைசியில் ஒருநாள் அவனையும் ஸாலிம் பின் உமைர் எனும் ஒரு ஸஹாபி கோபம் கொண்டு இரவு நேரத்தில் அவனுடைய வீட்டின் முற்றத்தில் வைத்து கொன்று விட்டார்கள். இவ்வாறு கூறப்படுகிறது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: வாக்தீ மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோர் அஸ்மாவு, அபூ அஃபக் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகக் கூறிய அந்தக் கோபமூட்டக் கூடிய கவிதைகள் சிலவற்றையும் எழுதியுள்ளார்கள். இந்த இரண்டு சம்பவங்களையும் சர் வில்லியம் மியூர் போன்றோர் முற்றிலும் விரும்பத்தகாத வகையில் தம்முடைய நூல்களின் அலங்காரமாக ஆக்கியுள்ளார்கள்.

இந்த ஓரியன்லிஸ்டுகள் இவற்றை சாக்காக வைத்துக் கொண்டு, பாருங்கள்! எவ்வளவு அநீதி நடந்துள்ளது! என்று கூறியுள்ளார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் அறிவிப்பு ரீதியான குறைபாடுகள் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றிற்கு முன்னால் இந்த சம்பவங்கள் சரியானவையாக நிரூபணமே ஆவதில்லை. இவை சரியானவை கிடையாது என்று சந்தேகம் ஏற்படுத்தக் கூடிய முதலாவது ஆதாரமாம் என்பது ஹதீஸ் நூல்களில் இந்த சம்பவங்கள் பற்றி குறிப்பு காணப்படுவதில்லை. அதாவது, எந்த ஹதீஸிலும் கொலையாளி அல்லது கொல்லப்பட்டவரின் பெயரைக் குறிப்பிட்டு இது போன்ற எந்த சம்பவமும் எடுத்துக் கூறப்படவில்லை.

இன்னும் சொல்வதாயின், ஹதீஸ் ஒரு புறமிருக்கட்டும். சில வரலாற்றாசிரியர்களும் இதைப் பற்றி கூறவில்லை. ஆனால், இது போன்ற சம்பவங்கள் உண்மையில் நடந்திருந்தால் ஹதீஸ் நூல்களும் சில வரலாற்று நூல்களும் இவற்றைக் குறிப்பிடாமல் விடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. இந்த சம்பவங்கள் வெளிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபா பெருமக்கள் மீது ஒருவகையில் ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தது; எனவே ஹதீஸ் தொகுப்பாளர்களும், வரலாற்றாசிரியர்களும் இதைப் பற்றி கூறாமல் விட்டிருப்பார்கள் என்று இவ்விடத்தில் சந்தேகம் கொள்ள முடியாது. ஏனெனில், முதலில் இந்த சம்பவங்கள் அவை நடந்த (தாகக் கூறப்படும்) அந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டவாறு பார்க்கையில் ஆட்சேபனைக்குரியவையல்ல.

இவ்வாறு கோபமூட்டுகின்றேன், அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டி விடுகிறேன் என்று பார்த்தாலும், அவை நடந்திருந்தாலும் ஆட்சேபனைக்குரியவையல்ல.

எனவே வரலாற்றாசிரியர்கள் (கூறாததற்கு) அல்லது ஹதீஸில் குறிப்பிடப்படாததற்குக் காரணம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தது என்று கூறுவது தவறாகும். இரண்டாவது, முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் எந்த ஓர் அறிவிப்பையும் அதனால் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் (ஸல்) அவர்கள் மீது வெளிப்படையாக ஆட்சேபனை எழுகிறது என்பதன் அடிப்படையில் மட்டும் ஒருபோதும் குறிப்பிடாமல் விடவில்லை என்ற விஷயம் ஹதீஸ் மற்றும் வரலாற்றை ஓரளவு

படித்திருக்கும் நபரிடமிருந்து மறைந்திருக்க முடியாது. இதற்கான காரணமாவது, எந்தவொரு விஷயத்தை அவர்கள் அறிவிப்பு அடிப்படையில் சரியானதாகக் காணப்பெற்றார்களோ அதை அதன் கருத்தின் காரணமாக அவர்கள் ஒருபோதும் எழுதத் தயங்கவில்லை என்பது அவர்களிடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையாக இருந்தது. இன்னும் கூறுவதாயின் அவர்களில் சில ஹதீஸ் தொகுப்பாளர்கள் மற்றும் பெரும்பாலான வரலாற்றாசிரியர்களின் வழிமுறை இவ்வாறு இருந்தது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபிகள் தொடர்பாக எந்த விஷயம் அவர்களை எட்டினாலும் சரி; அது அறிவிப்பு மற்றும் பகுத்தறிவு ஆகிய இரு வகையிலும் பலவீனமானதாகவும் நம்பகத் தகாததாகவும் இருந்தாலும் அவர்கள் அதற்கு நேர்மையுடன் தமது சேகரிப்புகளில் இடமளித்து வந்தார்கள்.

மேலும், இந்த விஷயத்திற்கான தீர்வை அவர்கள் கடும் முயற்சி செய்யும் அறிஞர்கள் மீது அல்லது பின்னால் வரக் கூடிய ஆய்வாளர்கள் மீது அவர்கள் அறிவிப்பின் அடிப்படையிலும் அறிவுப்பூர்வமாகவும் சரியானது எது? குறையானது எது? என்பதைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவார்கள்.

இவ்வாறு செய்வதில் அவர்களின் எண்ணத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகளோடு பொருத்திக் கூறப்படும் எந்த விஷயமாக இருந்தாலும் அவை சரியானவையாகத் தென்பட்டாலும் சரி; தவறானவையாகத் தென்பட்டாலும் சரி அவை சேகரிக்கப்படாமல் இருந்து விடக் கூடாது என்பதாக இருந்து வந்தது. இதன் காரணமாகவே வரலாற்றின் ஆரம்ப நூல்களில் எல்லா விதமான நிறைகுறையுள்ள குவியல் ஒன்று சேர்ந்து விட்டது. ஆனால், அவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளத்தகுந்தவை என்பது அதற்குப் பொருள் அல்ல. மாறாக, அவற்றில் பலவீனமானதை பலம் வாய்ந்ததை விட்டும் பிரிப்பது இப்போது நமது பணியாகும். எவ்வாறு இருப்பினும், ஒரு முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பாளர் அல்லது வரலாற்றாசிரியர் ஒருபோதும் எந்தவோர் அறிவிப்பையும், அது வெளிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லது ஸஹாபா பெருமக்களின் மேன்மைக்கு எதிரானது என்ற அடிப்படையிலோ அல்லது அதன் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லது இஸ்லாத்தின் மீது ஏதாவது ஆட்சேபனை எழுகிறது என்ற அடிப்படையிலோ கைவிடவே இல்லை. இந்த விஷயத்திற்கு சற்றும் இடமில்லை.

எனவே அஸ்மா மற்றும் அபூ அஃபக்குடன் தொடர்புடைய கற்பனை சம்பவங்களுடன் முற்றிலும் ஒத்துப்போகின்ற கஅப் பின் அஷ்ரஃப் மற்றும் யூதன் அபூ ராஃபி கொல்லப்பட்ட சம்பவங்கள் ஹதீஸ் மற்றும் வரலாற்றின் எல்லா நூல்களிலும் முழுக்க, முழுக்க தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு முஸ்லிம் அறிவிப்பாளரும் அல்லது ஹதீஸ் தொகுப்பாளரும் அல்லது வரலாற்றாசிரியரும் இவற்றை எடுத்துரைக்காமல் விட்டு விடவில்லை.(நிலைமைகள்) இவ்வாறிருக்க, அஸ்மா மற்றும் யூதன் அபூ அஃபக் கொல்லப்பட்ட குறிப்பு எந்த ஹதீஸிலும் காணப் பெறாதது; இன்னும் கூறுவதாயின் ஆரம்ப வரலாற்றாசிரியர்களில் சில வரலாற்றாசிரியர்களுமே இது சம்மந்தமாக மௌனமாக இருப்பது, இந்தக் கதைகள் புனையப்பட்டவை என்பதையும், எப்படியோ சில அறிவிப்புகளில் இடம் பெற்று வரலாற்றின் அங்கமாக ஆகிவிட்டன என்பதையும் உறுதியாக வெளிப்படுத்துகிறது.

அடுத்து, இந்தக் கதைகளின் விபரங்களைப் படித்துப் பார்த்தால் அவை உருவாக்கப்பட்டவை என்பது இன்னும் உறுதியாகி விடுகின்றது. உதாரணமாக அஸ்மாவின் கதையில் இப்னு சஃது போன்றோரின் அறிவிப்பில் கொலையாளியின் பெயர் உமைர் பின் அதீ என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு எதிராக இப்னு துரைது அவர்களின் அறிவிப்பில் கொலையாளியின் பெயர் உமைர் பின் அதீ என்று அல்ல ; மாறாக, ஃகஷ்மீர் என்று உள்ளது.

சுஹைலீ இவ்விரு பெயர்களையும் தவறானவை என்று கூறிவிட்டு உண்மையில், அஸ்மாவை அவளுடைய கணவர் தான் கொன்றார் என்று கூறுகிறார். அறிவிப்புகளில் அவரது பெயர் யஸீது பின் ஸைது என்று கூறப்பட்டுள்ளது.பிறகு, சில அறிவிப்புகளில் மேற்கூறப்பட்ட நபர்களில் யாருமே அஸ்மாவின் கொலையாளி கிடையாது; மாறாக, அவளைக் கொன்றது பெயர் தெரியாத ஒரு நபர் ஆவார். அவர் அவளுடைய சமுதாயத்தை சேர்ந்த ஒருவரேதான் என்று வருகிறது.

கொல்லப்பட்டவரின் பெயரை இப்னு ஸஃது போன்றோர் அஸ்மா பின்த் மர்வான் என்று கூறியுள்ளனர். ஆனால், அல்லாமா இப்னு பர் கூறுவதாவது, அவள் அஸ்மா கிடையாது; மாறாக, உண்மையில், உமைர் அவர்கள் தம் சகோதரியான பின்த் அத்தீயைக் கொன்றார்கள். கொல்லப்பட்ட நேரம் இப்னு ஸஃது அவர்கள் இரவின் நடுப்பகுதி என்று எழுதியுள்ளார்கள். ஆனால், ஸர்கானீ அவர்களின் அறிவிப்பிலிருந்து பகல் அல்லது அதிகபட்சமாக இரவின் ஆரம்ப பகுதி என்று நிரூபணமாகின்றது. ஏனெனில், கொல்லப்பட்டவள் பேரீத்தம் பழம் விற்றுக் கொண்டிருந்தாள் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இந்த விபரம் அனைத்தையும் நான் முன்னரும் கூறியிருக்கின்றேன்.

பிறகு, இப்போது கூறப்படும் இரண்டாவது சம்பவம் அபூ அஃபக் கொல்லப்பட்டது பற்றியதாகும். இதில் இப்னு ஸஃது மற்றும் வாக்தீ ஆகியோர் கொலையாளியின் பெயரை ஸாலிம் பின் உமைர் என்று எழுதியுள்ளார்கள். ஆனால், சில அறிவிப்புகளில் அவரது பெயர் ஸாலிம் பின் அம்ர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இப்னு உக்பா அவர்கள் ஸாலிம் பின் அப்தில்லாஹ் என்று கூறியுள்ளார்கள்.

இவ்வாறே கொல்லப்பட்ட அபூ அஃபக் பற்றி இப்னு ஸஃது அவர்கள் அவன் யூதனாக இருந்தான் என்று எழுதியுள்ளார்கள். ஆனால், வாக்தீ அவனை யூதன் என்று எழுதவில்லை. பிறகு, ஸாலிம் தாமே கோபங் கொண்டு அபூ அஃபக்கைக் கொன்று விட்டார்கள் என்பது இப்னு ஸஃது மற்றும் வாக்தீ ஆகிய இருவர் மூலமாகவும் தெரிய வருகின்றது. ஆனால், அவனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் பேரில் கொன்றதாக ஓர் அறிவிப்பில் வருகிறது.

கொலை செய்யப்பட்ட நேரம் தொடர்பாகவும் இப்னு ஸஃது மற்றும் வாக்தீ ஆகிய இருவரும் அதை அஸ்மா கொல்லப்பட்டதற்குப் பிறகு நிகழ்ந்ததாக கூறுகின்றார்கள். ஆனால், இப்னு இஸ்ஹாக் மற்றும் அபுர் ரஃபீ அதை அஸ்மா கொல்லப்பட்டதற்கு முன்னுள்ளதாகக் கூறுகிறார்கள்.

இந்தக் கதைகள் புனையப்பட்டவையாகும்; இட்டுக்கட்டப்பட்டவையாகும் என்பது தொடர்பாக இந்த அனைத்து முரண்பாடுகளும் வலுவான சந்தேகத்தை உருவாக்குகின்றன அல்லது இவற்றில் ஏதாவது உண்மைத்துவம் இருக்கிறது என்றால் அது என்ன? எத்தகையது என்பதைக் கூற முடியாத அளவுக்கு அது மறைந்திருக்கின்றது.

இந்த சம்பவங்கள் தவறானவை ஆகும் என்பதற்கு பிறிதோர் ஆதாரம் இதுவாகும்; இந்த இரண்டு சம்பவங்கள் (நடந்த) காலமாக எந்தக் காலம் கூறப்பட்டுள்ளது என்றால், அந்தக் காலம் வரை முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் எந்த சண்டையோ அல்லது மோதலோ வெளிப்படவில்லை என அது குறித்து அனைத்து வரலாற்றாசிரியர்களும் ஒருமித்திருக்கின்றார்கள்.

ஆக, பனூ கைனுகா போர் பற்றியதாகும். இது முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் நடைபெற்ற முதல் போராகும் என்பதும், பனூ கைன்கா (கோத்திரத்தினர்) தான் இஸ்லாத்தின் மீதான பகைமையில் செயல் நடவடிக்கை மேற்கொண்ட முதல் யூதர்கள் ஆவர் என்பதும் (அனைவராலும்) ஏற்றுக் கொள்ளப்பட்டதாக வரலாற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் போருக்கு முன்னர் யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் இது போன்ற பெரும் சண்டை ஏற்பட்டு இருந்தது என்பதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

பின்னர், ஒருவேளை பனூகைனுகா போருக்கு முன்னால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து இருந்தன என்றால், அந்தப் போருக்கான காரணங்கள் போன்றவற்றை எடுத்துரைக்கும்போது இந்த சம்பவங்களைப் பற்றிய குறிப்பு வராமல் இருந்திருப்பது அசாத்தியமானதாக இருந்தது.

போருக்கான காரணங்கள் எடுத்துரைக்கப்பட்டபோது, இந்த சம்பவங்களைப் பற்றி குறிப்பு வருவதில்லை. இவ்வாறு எங்கள் மக்கள் இருவர் கொல்லவும் பட்டார்கள் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். குறைந்தபட்சம் இந்த அளவாவது கண்டிப்பாக நடந்திருக்க வேண்டும். அதாவது, இந்த சம்பவங்களின் அடிப்படையில் யூதர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக செயல் ரீதியிலான சீண்டலில் முந்திக் கொண்டார்கள் என்று ஒரு வெளிப்படையான ஆட்சேபனை வடிவத்தை அவர்கள் உருவாக்கியிருக்கலாம். இந்த சம்பவங்கள் குறித்து கூப்பாடு போட்டிருக்கலாம். ஆனால், எந்த வரலாற்றிலுமே அவ்வளவு ஏன்? இந்தக் கதைகளை அறிவித்துள்ள அந்த வரலாற்று ஆசிரியர்களுடைய நூல்களிலும் கூட மதீனத்து யூதர்கள் எப்போதாவது, ஏதாவது ஆட்சேபனை செய்ததாகக் கூறப்படவே இல்லை. அவர்கள் ஆட்சேபனையை எழுப்பியிருக்கலாம்; ஆனால், முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அதைப் பற்றி குறிப்பிடாமல் இருந்திருக்கலாம் என்ற சிந்தனை யாருக்காவது ஏற்பட்டால்,

அது தவறான மற்றும் அடிப்படையற்ற சிந்தனையாக இருக்கும். ஏனெனில், கூறப்பட்டுவிட்டது போன்று, ஒருபோதும் எந்தவொரு முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பாளரோ அல்லது வரலாற்றாசிரியரோ எதிரிகளின் எந்த ஆட்சேபனை மீதும் திரையிடவில்லை.

உதாரணமாக, நக்லா போர் பற்றிய குறிப்பில் மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக கண்ணியத்திற்குரிய மாதங்களை அவமதித்ததாக அவதூறு கூறியபோது, முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் உன்னதமான நேர்மையுடன் அவர்களுடைய இந்த ஆட்சேபனையைத் தங்களுடைய நூல்களில் பதிந்து விட்டார்கள். எனவே இந்த சந்தர்ப்பத்திலும் யூதர்கள் தரப்பிலிருந்து ஏதாவது ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தால், வரலாறு அதைக் குறிப்பிடாமல் இருந்திருக்காது. சுருக்கமாக, எந்தக் கோணத்தில் பார்த்தாலும் சரி, இந்த சம்பவங்கள் சரியானவையாக நிரூபணமாகவில்லை. மேலும், எப்படித் தெரிகிறது என்றால், ஒன்று யாரேனும் ஒரு மறைவான எதிரி யாராவது ஒரு முஸ்லிமோடு பொருத்தி இந்தக் கதைகளைக் கூறிவிட்டான்.பிறகு அவை முஸ்லிம்களின் அறிவிப்புகளில் இடம்பெற்று விட்டன. அல்லது யாராவது ஒரு பலவீனமான முஸ்லிம், கேடுவிளைவித்து வந்த சில நிராகரிப்பாளர்களைத் தனது கோத்திரத்தைச் சேர்ந்த மனிதர்கள் கொன்றார்கள் என்ற இந்தப் பொய்யான பெருமையைத் தனது கோத்திரத்தோடு பொருத்திக் கூறுவதற்காக இந்த அறிவிப்புகளை வரலாற்றில் நுழைத்து விட்டார். அல்லாஹ்வே நன்கறிவான்.

இவையோ இந்த சம்பவங்களின் அசலான உண்மைத்துவமாகத் தென்படுகின்றது. ஆனால், முதலில் சுட்டிக் காட்டப்பட்டது போன்று இந்த சம்பவங்கள் சரியானவையாக இருந்தாலுமே எந்த நிலைமைகளில் அவை நடந்தனவோ அவற்றை பார்க்கும்போது அவற்றை ஆட்சேபனைக்குரியவையாகப் புரிய முடியாது. அந்த நாட்களில் இருந்த முஸ்லிம்களின் இக்கட்டான நிலை பற்றி கூறப்பட்டு விட்டது.

(உதாரணமாக) ஒரு மனிதர் ஓரிடத்தில் சிக்கிக் கொள்கிறார். அதன் நாலாப்புறமும் தொலைதூரம் வரை பயங்கரமான நெருப்பு கொழுந்து விட்டு எரிகிறது. அவருக்கு (அதை விட்டு) வெளியேற எந்த வழியும் இல்லை. பிறகு, அவருக்கு அருகிலும் அவருடைய உயிருக்கு எதிரிகளான மக்கள் நின்று கொண்டிருக்கின்றார்கள். (அதை விட்டு) வெளியேற எந்த வழியும் இல்லை. (முஸ்லிம்களான) அவர்களின் நிலை சரியாக அந்த மனிதரைப் போன்று ஆகிக் கொண்டிருந்தது.

முஸ்லிம்களின் இத்தகைய இக்கட்டான நிலையில் யாராவது ஒரு தீயவன் அல்லது குழப்பத்தை ஏற்படுத்துபவன் தங்களின் எஜமானர் மற்றும் தலைவருக்கு எதிராக கோபமூட்டக் கூடிய கவிதைகளைக் கூறி, கூறி மக்களை அவருக்கு எதிராகத் தூண்டி விட்டு வந்தார் என்றால் மேலும் அவரைக் கொல்லுமாறு எதிரிகளைத் தூண்டி விட்டு வந்தார் என்றால் அந்தக் காலத்தின் நிலைமைகளின்படி இதற்கான சிகிச்சை அப்படிப்பட்ட நபரைக் கொல்வதைத் தவிர வேறு என்ன இருந்திருக்க முடியும்? அடுத்து, பழிவாங்குவதற்குத் தகுந்ததாகக் கருதப்படாத சாதாரணமான கொலையும் அந்த நிலையில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து நிகழ்ந்தது. ஆக, ஒவ்வொரு விஷயத்திலும் எதிரான அம்சத்தை மேற்கொள்ளும் மார்கோலிஸ் போன்ற மனிதர் - இவரும் ஓரியன்ட்லிஸ்ட் ஆவார் - இவர் கூட இந்த சம்பவங்கள் காரணமாக முஸ்லிம்களைக் குற்றஞ்சாட்டத் தக்கவர்களாகக் கூறவில்லை.

ஆக, மிஸ்டர் மார்க்கோலிஸ் எழுதுகின்றார்: அஸ்மாவுடைய கவிதைகள் சரியாக அவளோடு பொருத்திக் கூறப்பட்டிருப்பின் அவள் அவற்றில் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொல்லுமாறு அன்னாருடைய எதிரிகளை வேண்டுமென்றே தூண்டி விட்டாள். எனவே அவளைக் கொன்றது உலகத்தின் எந்தத் தரத்தின் அடிப்படையிலான மதிப்பீட்டாலும் ஓர் அடிப்படையற்ற மற்றும் அநீதியான செயலாகக் கருதப்பட முடியாது. பிறகு, இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இழிவுபடுத்தும் கவிதைகள் வடிவில் மேற்கொள்ளப்பட்ட கோபமூட்டுவதற்கான அந்த வழிமுறை மற்ற நாடுகளைக் காட்டிலும் அரேபியா போன்ற நாட்டில் மிக அதிகமாக பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்க முடியும்.குற்றவாளிகள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்ற இந்த விஷயம் அரேபியாவில் அந்தக் காலத்தில் வழக்கத்தில் இருந்த வழிமுறையில், ஒரு மிகப் பெரும் சீர்திருத்தமாக இருந்தது. ஏனெனில், குற்றவாளி மட்டுமே கொலை செய்யப்பட்டார். மற்ற மக்களைக் கொல்லவில்லை. ஏனெனில், அரேபியர்களில் கோபத்தை மூட்டக் கூடிய கவிதைகள் காரணமாக (சில) நபர்கள் வரை மட்டும் விவகாரம் வரையறுந்து இருந்து விடாது. அதையும் தாண்டி மொத்த கோத்திரங்களிலும் பயங்கரமான போர் தீ மூண்டு வந்தது. அதனிடத்தில் இஸ்லாத்தில் இந்த சரியான அடிப்படை நிலைநாட்டப்பட்டது. அதாவது, குற்றவாளிக்கான தண்டனை குற்றவளிக்கு மட்டும் கிடைக்க வேண்டுமே அன்றி, அவனுடைய உற்றார் உறவினர்களுக்குக் கிடைக்கக் கூடாது.

மிஸ்டர் மார்கோலிஸுக்கு இந்தக் கொல்லப்பட்ட விஷயங்கள் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருக்கின்றது என்றால் மேற்கொள்ளப்பட்ட அந்த வழிமுயையின் காரணமாக இருக்கின்றது. அதாவது ஏன் அவர்களுடைய குற்றங்களை முறையாக அறிவித்து அவர்களுக்கு முறைப்படி தண்டனை வழங்கப்படவில்லை என்பதாகும்.

எனவே இதற்கான முதல் பதிலாவது அந்த சம்பவங்களை சரியானவையாகக் கருதினாலும் அவை சில முஸ்லிம்களின் தனிப்பட்ட செயல்களாகவே இருந்தன. அவை அவர்களிடமிருந்து கடுமையான கோபத்தின் நிலையில் வெளிப்பட்டன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவற்றிற்கான கட்டளையைப் பிறப்பிக்கவில்லை. இது இப்னு ஸஃது அவர்களின் எடுத்துரைப்பிலிருந்து உறுதியாகக் காணப்படுகின்றது.

இரண்டாவது, ஒரு கற்பனைக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையாகக் கருதினாலும், பிறகும் கூட நிச்சயமாக அந்தக் காலத்தின் நிலைமைகள் எப்படி இருந்தன என்றால், அஸ்மா மற்றும் அபூ அஃபக் கொல்லப்படுவது தொடர்பாக முறையான வழிமுறை முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருந்தால் கொல்லப்பட்டவர்களுக்கு சம்பந்தப்பட்ட மக்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் நம்முடைய இன்ன மக்கள் கொல்லப்படுவார்கள் என்பது தெரிந்து விட்டிருந்தால் அதன் விளைவுகள் மிகவும் பயங்கரமானதாக ஆகியிருக்கும்.

மேலும், இந்த சம்பவங்கள் முஸ்லிம்கள் மற்றும் யூதர்களுக்கு இடையிலும், மேலும் முஸ்லிம்கள் மற்றும் மதீனத்து நிராகரிப்பாளர்களுக்கு இடையிலும் ஒரு நீண்ட போருக்கான நெருப்பை மூட்டியிருப்பதற்கான கடுமையான அபாயம் இருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: மிஸ்டர் மார்கோலிஸ், கொன்ற செயலை மட்டும் அரேபியாவின் குறிப்பிட்ட சூழ்நிலையின்படி ஆகுமானதாகக் கூறியுள்ள அதேவேளையில் கொன்ற முறையைப் பற்றி அவருடைய பார்வை அந்தக் காலத்தின் குறிப்பிட்ட நிலைமைகளின் பக்கம் ஏன் செல்லவில்லை? என்று வியப்பு ஏற்படுகிறது. அவர் இந்த அம்சத்திலும் அந்தக் காலத்தின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டிருந்தார் என்றால் கொல்லப்பட்டது என்பது சரியாக இருந்தால், (கொல்வதற்காக) மேற்கொள்ளப்பட்ட இந்த வழிமுறையே அந்தக் காலத்தின் நிலைமைகளுக்கும் பொது அமைதியின் பலனுக்கும் பொருத்தமானதாக, அவசியமானதாக இருந்தது என்பது அநேகமாக அவருக்கு உறுதியாகியிருக்கும். ஆனால், செயல் அடிப்படையில் (அப்படி ஒரு சம்பவம்) நடக்கவே இல்லை.

சுருக்கமாகக் கூறினால், முதல் விஷயம் அஸ்மா மற்றும் யூதன் அபூ அஃபக் கொல்லப்பட்ட சம்பவங்கள் அறிவிப்பு அடிப்படையிலும், அறிவிப்பூர்வமாகவும் சரியானவையாக நிரூபணமாவதே இல்லை. ஒரு கற்பனைக்கு அவற்றை சரியானவையாகக் கருதினாலும் அந்தக் காலத்தின் நிலைமைகளின்படி அவற்றை ஆட்சேபனைக்குரியவையாகக் கருத முடியாது. பிறகு எந்த வடிவிலும் சரி! இந்தக் கொலை சம்பவங்கள் எந்நிலையிலும் சில முஸ்லிம்களின் தனிப்பட்ட செயல்களாக இருந்தன. அவை கடுங் கோபத்தின் நிலையில் அவர்களால் நிகழ்ந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவற்றைக் குறித்து எந்தக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களைக் கொல்லுங்கள் என்று கட்டளையிட்டதாகக் கூறப்படும் இந்த அவதூறே தவறானதாகும்.

இவையனைத்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு பொருத்திக் கூறப்பட்டுள்ள இட்டுக்கட்டப்பட்ட விஷயங்கள் ஆகும். இந்த வரலாற்றாசிரியர்கள் என்ன எழுதினார்களோ அதைப் பிற்காலத்தில் சரியான முறையில் அணுகி ஆராய்ந்திருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். அவன் தனது பேரருளால் நமக்கு இந்தக் காலத்தின் இமாம் அவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்வாய்ப்பை வழங்கியுள்ளேன். மேலும், ஒவ்வொரு விஷயத்தையும் நாம் பார்த்து ஆராய்ந்து அதன் உண்மைத்துவத்தைப் புரிந்து பிறகு எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்கிறோம். இந்த விஷயங்களை வழக்கத்தில் கொண்டு வந்து தம்முடைய பலன்களை மட்டும் பெறக் கூடிய மேலும் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தி முயற்சி செய்யக் கூடிய அந்த அறிஞர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! ஒருபுறமோ அவர்கள் தாம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதாகக் கூறுகிறார்கள். ஆனால், உண்மையில்

அவர்களுடைய செயல்களே அவர்களிடம் பயங்கரவாதத்தை ஏற்படுத்தி விட்டன. அல்லாஹ் அவர்களுக்கும் அறிவை வழங்குவானாக!

இப்பொழுது நான் சில மர்ஹூம்களைப் பற்றியும் கூறுவேன். அதில் முதல் குறிப்பு பேராசிரியர் டாக்டர் நாஸிர் அஹ்மத் கான் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் பர்வேஸ் பர்வாஸீ என்ற பெயரில் பிரசித்தி பெற்றிருந்தார்கள். கடந்த நாட்களில் கனடாவில் 87 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்கள் காதியானில் பிறந்தார்கள். இவர்களின் தந்தையார் மௌலானா அஹ்மத் கான் ஸாஹிப் நஸீம் அவர்கள் இயக்கத்தின் முபல்லிஃக் ஆக இருந்தார்கள். பிறகு நீண்ட காலம் உள்ளூர் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆக இருந்தார்கள். இவர்கள் மிகவும் துணிச்சலான மனிதராக இருந்தார்கள். இவர்கள் ஜமாஅத்துகளை மிகவும் ஒருங்கிணைத்தார்கள். இவர்களின் தாயார் ரஹ்மத் பீபீ ஆவார்கள்.

பர்வாஸீ ஸாஹிப் காதியானில் ஆரம்பக் கல்வி பயின்றார்கள். பிறகு, பத்தாம் வகுப்பு முடித்ததும் இவர்கள் கல்லூரியில் சேர்க்கை பெறவில்லை. ஏனெனில், தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி அப்பொழுது லாஹூரில் இருந்து வந்தது. கல்லூரி ரப்வாவிற்கு மாற்றப்பட்ட பிறகு இவர்கள் அங்கு கல்லூரியில் சேர்க்கை பெற்றார்கள்.

1958-ல் BA பட்டம் பெற்றார்கள். 1960-ல் ஓரியன்டல் கல்லூரி எனும் பல்கலைக்கழகத்தில் MA முடித்தார்கள். 1968-ல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் இருந்து PHD பட்டம் பெற்றார்கள். பேராசரியர் நாஸிர் பர்வாஸீ 1960-ல் உருதுவில் எம்.ஏ முடித்த பிறகு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்கள். மேலும், கல்வி கற்பிப்பதை இவர்கள் அரசாங்கத்தின் கல்லூரியான முஸஃப்பர் கட் அரசுக் கல்லூரியில் ஆரம்பித்தார்கள். பின்னர் இலக்கிய பணிகளில் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள். அல்ஃபஸ்ல் பத்திரிகையிலும், மிஸ்பாஹ், காலித் போன்ற மாதாந்திர பத்திரிகைகளிலும் இவர்களுடைய கட்டுரைகள் வெளியாகி வந்தன.இவ்வாறே கவிதைகள் கூறுவதிலும் இவர்களின் சிறப்பு வேட்கை இருந்தது. நல்ல கவிதைகள் கூறி வந்தார்கள். தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி ரப்வாவில் உருவான பிறகு வாழ்கையை அர்ப்பணித்து 1961-ல் இவர்கள் அங்கு சென்றார்கள். 1969 வரை விரிவுரையாளராக பணியாற்றினார்கள். 1969-லிருந்து 75 வரை ரப்வாவின் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் உருதுத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

1975-லிருந்து 79 வரை ஜப்பானில் உள்ள வெளிநாட்டு படிப்புகளுக்கான ஒசாகா பல்கலைக்கழகத்தில் வருகை தரும் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்கள். அங்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கும்போது இவர்கள் பாகிஸ்தான் மற்றும் ஜப்பானின் சிறந்த தொடர்புகளுக்கு பெரிதும் முயற்சி செய்தார்கள். டோக்கியோவில் ஜமாஅத்தை நிறுவுவது தொடர்பாகவும் இவர்கள் உதவி புரிந்தார்கள். 1979-ல் இவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

பிறகு கல்லூரி தேசியமயமாக ஆன பிறகு பாகிஸ்தானின் பல்வேறு கல்லூரிகளில் இவர்கள் துணை பேராசிரியராகப் படித்துக் கொடுத்து வந்தார்கள். 1986-லிருந்து 1990 வரை இவர்கள் ஃபைஸலாபாதின் அரசுக் கல்லூரியில் துணை பேராசிரியராக படித்துக் கொடுத்து வந்தார்கள். அஹ்மதியாக இருந்ததன் காரணமாக அந்தக் காலகட்டத்தில் மிகவும் அதிகமான சிரமங்களை எதிர் கொள்ள நேரிட்டது.

இறுதியில் சிறைபிடிக்கப்படும் அளவுக்கு நிலைமை சென்ற பிறகு எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கு யூ.கேவிற்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மேலான சபைக்கு வந்தார்கள். பின்னர், அன்னாரின் கட்டளையால் சுவீடனுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அங்கு 1991-லிருந்து 2001 வரை ஸ்வீடனின் உஸ்பாலா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக தொண்டுகள் ஆற்றி வந்தார்கள்.

ஸ்வீடனில் தங்கியிருந்த காலத்தில் இலக்கியங்களுக்கான நோபல் பரிசுக் குழுவின் உறுப்பினரும் ஆனார்கள். 16 ஆண்டுகள் தொண்டாற்றி வந்தார்கள். 2003-ல் கனடாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். இலக்கிய உலகம் மற்றும் கல்வி களத்தில் இவர்களின் பெயர் மிகவும் பிரசித்தி பெற்றது. இவர்களின் துணைவியார் அமத்துல் மஜீத் ஸாஹிபா கூறுகின்றார்கள்.

மஜீத் ஸாஹிபா மவ்லவி முஹம்மத் அஹ்மத் ஸாஹிப் ஜலீல் அவர்களின் மகளாவார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இரண்டு மகன்களையும், மூன்று மகள்களையும் வழங்கியுள்ளான்.

இவர்களின் துணைவியார் கூறுகின்றார்கள்: நாங்கள் 63 ஆண்டுகள் ஒன்றாக இருந்தோம். ஒவ்வோர் ஏற்றத்தாழ்விலும், சுகதுக்கத்திலும், துன்பத்திலும், இன்பத்திலும் அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். ஏனெனில், நான் பெற்றோரின் மூத்த மகளாக இருந்தேன். ரப்வாவில் வாழ்ந்து வந்தேன். அவர்களும் அதாவது பேராசிரியர் பர்வாஸீ ஸாஹிபும் ஒருபோதும் நான் அவர்களுக்குத் தொண்டு செய்வதைத் தடுக்கவில்லை. இன்னும் கூறுவதாயின் என்னை விட (நன்றாக) அவர்களைப் பார்த்துக் கொண்டார்கள்.

துணைவியார் கூறுகின்றார்கள்: என்னுடைய உறவினர்கள் அனைவரிடமும் அவர்களது நடைமுறை - அதாவது தமது மனைவி வீட்டு உறவினர்களிடமும்- மிகவும் முன்னுதாரணமாக இருந்தது. உறவினர்களுக்கு வழங்குதல் என்பதற்கான ஓர் உயரிய உதாரணமாக இருந்தது. அளவற்ற அன்பு மற்றும் களங்கமற்றத் தன்மையுடன் உறவினர்களை அணுகி வந்தார்கள். அவர்களது ஒவ்வொரு சுகதுக்கத்திலும் கலந்து கொள்வார்கள்.

இவர்களின் மகன் தாஹிர் அஹ்மத் கான் கூறுகின்றார்: எந்நிலையிலும் எந்த சூழலிலும் முகத்தில் புன்சிரிப்பே இருக்கும். எப்போதும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்கள்.

மகன் எழுதுகிறார்: மரணம் வரை என்னுடன் இவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். துஆவுக்காக விண்ணப்பித்து வந்தார்கள்.

கடுமையான நோயிலும் கடந்த நாட்களில் மருத்துவர்கள் கையை விரித்து விட்ட பிறகு இவர்களால் கையால் எழுதுவது சிரமமாக இருந்தபோதும், முதலில் இவர்கள் செய்தி அனுப்பி வந்தார்கள். பின்னர் சிலவேளை தமது கையால் எனக்கு துஆவிற்கு கடிதம் எழுதி அனுப்பி வைத்து வந்தார்கள். பெரிதும் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வின் தொடர்பு இருந்தது.

இவர்களின் மகன் எழுதுகின்றார்: ஜப்பானில் வாழ்ந்த காலங்களில் தந்தையார் அவர்களுக்கு ENCYCLOPEDIA - வவிற்கான பரிசு கிடைத்தது. அது அந்தக் காலத்தில் ஒரு பெரிய பரிசாக இருந்து வந்தது. அதை இவர்கள் கிலாஃபத் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கி விட்டார்கள். 1980-இன் பத்தாண்டில் இவர்களுக்கு இலக்கியத்துக்கான அல்லாமா இக்பால் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. ஆனால், அஹ்மதியாக இருந்த காரணத்தினால் இவர்கள் அழைக்கப்படவில்லை. இவர்களுக்கான பதக்கம் வீட்டிற்கு அனுப்பப்பட்டது.

இவர்களின் மகள் அமத்துல் வதூத் கூறுகின்றார்: என் தந்தையாருக்கு திருக்குர்ஆன் மீது நேசம் இருந்தது. தாமதிக்காமல் தினமும் ஒரு முழு ஜுஸ்வை ஓதி வந்தார்கள்.

மகள் கூறுகிறார் :

எனக்கு எப்போதாவது ஏதாவது ஒரு கட்டுரை அல்லது உரைக்காக ஆதாரம் ஏதும் தேவைப்பட்டால் இன்ன சூராவின் இன்ன வசனத்தில் தேடுங்கள் என்று ஒரு நிமிடத்தல் கூறிவிடுவார்கள்.

மகள் கூறுகின்றார்:

எங்கள் தந்தையார் எங்களுக்கு கிலாஃபத்துடனான அன்பைக் கற்றுக் கொடுத்தார்கள். எனது உள்ளத்தில் உள்ள விஷயத்தை எடுத்துரைப்பதற்கும், காலத்தின் கலீஃபா அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் ஊக்கமளித்தார்கள்.

இவர்களின் இரண்டாவது மகள் ஸஃபியா ஸாஹிபா கூறுகின்றார்கள்: என் தந்தையார் கிலாஃபத்திற்காக தம்மை மாய்த்துக் கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். எப்பொழுதும் அவர்களுடைய உரையாடலிலும், அணுகுமுறையிலும் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக அளவு கடந்த அன்பு மற்றும் பணிவைக் கண்டேன். எங்கள் தந்தையார் ஒவ்வொரு வேலைக்கு முன்னதாகவும் காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கடிதம் எழுதி வந்ததையும், துஆவிற்காக விண்ணப்பித்து வந்ததையும் பார்த்து வந்தோம். நோயின் நாட்களான கடைசி நாட்களிலும் மருத்துவர் வந்து வருத்தத்தைத் தெரிவித்தார்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அவநம்பிக்கையாக பேசினார். மருத்துவர் அறையை விட்டுச் சென்றதுமே இவர்கள் என்னிடம், பேனாவும், காகிதமும் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். பலவீனமான நடுங்கும் கைகளால் துஆவிற்காக கடிதம் எழுதினார்கள்.

இவர்கள் எனக்கு கடிதம் எழுதி வந்தார்கள் என்று முன்னர் கூறியிருக்கின்றேன். அதிகம் ஸதக்கா கொடுத்து வந்தார்கள். எவ்வளவு பணம் இருந்ததோ அதை ஸதக்காவிற்காக கொடுத்து வந்தார்கள்.

மகள் வழிப்பேத்தி நாயிலா மஹ்மூத் கூறுகின்றார்: நான் என் தந்தை வழிப்பாட்டனார் மூலமாக -தந்தை வழிப்பாட்டனார் என்றால் மகன் வழிப்பேத்தியாக இருப்பார் - ஈமான் என்றால் என்ன? அல்லாஹ்வுடன் உண்மையான அன்பு எப்படி தென்படுகிறது? என்பதையும் பார்த்தேன்; கற்றேன்.

இல்லை, மகள் வழிப்பேத்தியாக இருந்தார் என்றால் பின்னர் மர்ஹூம் இவர்களுடைய தாய் வழிப்பாட்டனாராக இருந்தார்கள்.

‘ ஸஃபர் மஹ்மூத் அவர்கள் இவர்களின் தந்தையார் ஆவார்கள். அல்லாஹ்வுடன் உண்மையான அன்பு எப்படி தென்படுகின்றது? ((என்பதைப் பாருங்கள்.)

மகள் கூறுகின்றார்: நான் இவர்களின் நிலைமை மற்றும் இறுதி மூச்சு வரை தொடர்ச்சியாக இவர்கள் அல்லாஹ்வை உள்ளத்தால், கலிமா விரலை உயர்த்தி, உயர்த்தி, அல்ஹம்துலில்லாஹ்,; அல்ஹம்துலில்லாஹ்! என்று கூறக் கேட்டு வியப்படைந்து போவேன். நிரந்தரமாக கடைசி நேரத்திலும் அல்ஹம்துலில்லாஹ் கூறிவந்தார்கள்.

மகள் கூறுகிறார்: இவர்களின் அன்பைக் கண்டு, அல்லாஹ்வின் தூய திருக்குர்ஆனின் மீதும் கிலாஃபத்தின் மீதும் எப்படிப்பட்ட அன்பு அவர்களுக்கு இருந்ததோ அப்படிப்பட்ட அன்பு எனக்கு கிடைத்து விட வேண்டும் என்று எனது உள்ளத்தில் ஒரு நெருப்பு பற்றி எரிந்தது. அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் பிள்ளைகள் மற்றும் சந்ததிக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா ரப்வாவைச் சேர்ந்த அமீர் கான் ஸாஹிப் பட்டீ அவர்களின் மகன் ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் பட்டீ அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 88 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். ஒரு மகன் தலைமையக பாதுகாப்புத் துறையில் பணிபுரிகின்றார்கள். இரண்டாவது மகன் தாஹிர் அஹ்மத் பட்டீ இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். ஸிராலியோனில் இயக்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு பெறுகிறார்கள். இவர்களின் மகன் தாஹிர் பட்டீ ஸாஹிப் முரப்பி ஆவார்கள்.

அவர் எழுதுகின்றார்: என் தந்தையார் இவ்வாறு கூறி வந்தார்கள்: பண்டிதர் லேக்ராமைப் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறியதும், அப்போது எங்களின் தந்தையார் மதிப்பிற்குரிய அமீர் கான் ஸாஹிப் பட்டீ அவர்கள் இளம் வயதுடையவராக இருந்தார்கள். அவர்களின் கூற்றுப்படி, இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதனால் அவர்களுடைய உள்ளத்தில் அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவம் குடி கொண்டு விட்டது. இருப்பினும், இளம் வயதுடையவராக இருந்தக் காரணத்தினால் காதியான் செல்லுதல் மற்றும் பைஅத் செய்தல் ஆகியவற்றை விட்டும் இழப்பிற்குரியவராக இருந்தார்கள். பிற்காலத்தில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள்.

1974-ல் வெடித்த குழப்பங்கள் மற்றும் எதிரான நிலைமைகள் காரணமாக இவர்கள் அந்த சமயத்தில் லாலியான் என்ற இடத்தில் வசித்து வந்தார்கள். அங்கிருந்து விட்டுவிட்டு ரப்வாவுக்கு வந்து விட்டார்கள். அங்கேயே குடிபெயர்ந்தார்கள். இவர்கள் ஜவுளி தொழிற்சாலையில் ஊழியம் செய்து வந்தார்கள். ஒருபோதும் தாம் அஹ்மதி என்பதை இவர்கள் மறைத்ததில்லை. எங்கு செல்ல வேண்டி வந்தாலும், முதல் நாளே நான் அஹ்மதி ஆவேன்; என்னுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்றால் வைத்திருங்கள்; ஏனெனில் நானோ அஹ்மதியாக இருந்தே என்னை அடையாளப்படுத்திக் கொள்வேன் என்று கூறி விடுவார்கள். இவர்களின் சகோதரர் லத்தீஃப் அஹ்மத் ஸாஹிப் ஜெர்மனியில் இருக்கிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஜவுளி தொழிற்சாலையில் வேலை செய்து வந்தபோது அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் இவர்களின் துறைக்கு வந்தான். நீ! அஹ்மதி என்பது எனக்குத் தெரிய வந்து விட்டது என்று கூறினான். அதற்கு இவர்கள் ஆமாம்! நான் அஹ்மதிதான் என்று கூறினார்கள். அப்பொழுது அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பழித்துக் கூற ஆரம்பித்தான்.

அவன் இப்பொழுது இந்தத் தொழிற்சாலையில் ஒன்று நீ இருப்பாய், இல்லை நான் இருப்பேன் என்று கூற ஆரம்பித்து விட்டேன். மேலும், அவன் தொழிற்சாலையில் உரிமையாளர்களையும், குழப்பம் செய்யத் தூண்டி விடுவதற்கு முழுமையாக முயற்சி செய்தான். இவர்கள் அந்தக் கணமே இவ்வாறு துஆவில் ஈடுபட்டார்கள்:

அல்லாஹ்வே! உன்னுடைய வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக உதவி புரிவாயாக! இந்தத் தீங்கை செயலற்றதாக்கி விடுவாயாக!

அவர்கள் கூறுகிறார்கள்: சிறிது நேரம் கழித்து ஒரு தொழிலாளி அவர்களிடம் வந்தார். அவர் கூறினார்: உங்களுடன் நாகரீகம் இல்லாமல் நடந்து கொண்டவன் தொழிற்சாலைக்கு வெளியே வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறான். தொழிற்சாலையின் உரிமையாளர்கள் ஒரு பண்டமாற்றில் அவனுடைய பெரிய திருட்டைப் பிடித்து விட்டார்கள். மேலும், அவனைத் தொழிற்சாலையிலிருந்து வேலையை விட்டுத் தூக்கி விட்டார்கள்.

இவர்கள் தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். ஐவேளைத் தொழுகைகளை முறையாகப் பேணி வந்தார்கள். எப்பொழுதும் துஆவில் மூழ்கியிருக்கும் மனிதராக இருந்தார்கள். இயக்கத்தின் இலக்கியங்களை அதிகம் படித்து வந்தார்கள். பணி ஓய்வுக்குப் பிறகோ இன்னும் அதிகம் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். எப்பொழுதும் இயக்கத்தின் ஏதாவது ஒரு நூல் இவர்களின் தலைமாட்டில் இருந்து வந்தது. அதைப் படிப்பதில் மூழ்கி வந்தார்கள்.

அஹ்மதிய்யா கலீஃபாக்கள் தரப்பிலிருந்து எப்பொழுது ஏதாவது ஒரு துஆவிற்காக வலியுறுத்தப்பட்டாலும் அதில் உடனடியாக மூழ்கி விடுவார்கள். மிகவும் அதிகமாக தரூது ஷரீஃப் ஓதி வந்தார்கள்.

முரப்பியான இவர்களின் மகன் கூறுகிறார்கள்: நான் பள்ளிக் கூடத்தில் ஆறாம் வகுப்பில் இருந்தபோது இவர்கள் என்னிடம் பள்ளிக்கூடத்திற்குப் போகும் போதும், வரும்போதும் துரூது ஷரீஃப் ஓதி வாருங்கள் என்று கூறி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் நான் ஒரு நாளுக்கு ஆயிரம் தடவைக்கு மேல் துரூது ஷரீஃப் ஓதுகிறேன் என்று பட்டீ ஸாஹிப் அவர்கள் தம்மைப் பற்றி கூறினார்கள்.

அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு பேராசிரியர் அப்துல் காதிர் டாஹிரீ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் நவாப்ஷாஹ் மாநிலத்தின் முன்னாள் அமீராக இருந்தார்கள். 92 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களுக்கு ஒரு மகனும் ஐந்து மகள்களும் இருக்கின்றார்கள். இவர்களின் மகன் சமர் அஹ்மத் எழுதுகிறார்கள்; இவர்களின் தந்தையார் மர்ஹூம் ரயீஸ் முஹம்மத் முகீம் கான் டாஹ்ரீ ஸாஹிப் அவர்கள் மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது.

அப்துல் காதிர் ஸாஹிப் மிகவும் துணிச்சலான மற்றும் உண்மை பேசும் மனிதராக இருந்தார்கள்.

இவர்களின் மகன் எழுதுகிறார்கள்: சமுதாயத்தில் பிற்படுத்தப்படும் மக்களுடன் அமர்வதில்,பழகுவதில் எந்தத் தயக்கத்தையும் உணரமாட்டார்கள். ஏனெனில், அங்கோ அங்குள்ள வழக்கப்படி ஓர் ஏழையை சரிசமமாக அமர்த்துவது பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. பல்கலைக்கழகத்தில் இருந்து சிந்து மொழியின் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்கள். அந்தக் காலத்தில் சிந்து மாகாணத்தில் கல்விக் கூடங்களின் பற்றாக்குறை இருந்தது. எனவே கல்வியின் மீதான ஆர்வத்தின் காரணமாக ஹைதராபாதில் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணியை ஆரம்பித்தார்கள். இவர்களின் ஆர்வத்தைப் பார்த்து அங்குள்ள கல்லூரி முதல்வர் இவர்களிடம், நவாப்ஷாஹில் ஒரு கல்விக் கூடத்தைத் திறந்து விடுங்கள். மேலும் அங்கு மாலை வகுப்புகளைத் துவங்குங்கள் என்று கூறினார். அந்த வகுப்புகள் திறக்கப்பட்டன. அது பெரிதும் முன்னேற்றம் அடைந்தது. அதற்குப் பிறகு அது தயாராகிவிட்டது. மேலும், இவர்களின் கடின உழைப்பின் காரணமாக அது சிந்து மாகாணத்தின் பிரபலமான கல்லூரிகளில் ஒன்றாக கணக்கிடப்படலானது.

இவ்வாறே சிந்து மாகாணத்தின் எல்லா பெரிய அரசியல் குடும்பங்களுடனும் தொடர்புகள் இருந்தன. மேலும், நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவன் என்று அவர்களுக்குப் பகிரங்கமாகக் கூறிவந்தார்கள். பிள்ளைகளிடமும் ஒருபோதும் அஞ்சி நீங்கள் அஹ்மதி

என்பதை மறைக்கக் கூடாது என்று கூறினார்கள். மேலும், எப்போதும் சிந்து மொழியில் நாங்களோ அஹ்மதிய்யத் எனும் அணிகலனை அணிந்துள்ளோம். அது ஒரு தனிச்சிறப்பு மிக்க அடையாளம் ஆகும் என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்(ரலி) அவர்களின் வழிகாட்டலின் பேரில் இவர்களுக்கு சிந்து மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதற்கான நற்பாக்கியமும் கிடைத்தது. மேலும், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க தஃப்ஸீர் ஸகீரை சிந்து மொழியில் இரண்டு தொகுதிகளை உள்ளடக்கியதாக மொழியாக்கம் செய்வதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது.

திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்களைக் கொண்ட ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டதன் அடிப்படையில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மட்டுமின்றி நான்கு நபர்கள் மீது 295C எனும் (பிரிவின் கீழ்) வழக்கு தொடுக்கப்பட்டது. அதில் இவர்களின் பெயரும் இருந்தது.

சிந்து மொழி மட்டுமின்றி உருது மொழியிலும் இவர்கள் எந்த அளவு தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்றால் யாருக்குக் கடிதம் எழுதினாலும் அவர் எழுத்தா(ற்றலா)ல் தாக்கத்திற்குள்ளாவார். இவர்கள் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்கள். பல்கலைக்கழகத்தில் இருந்து PHD படிக்கும் மாணவர்களும் இவர்களிடம் வழிகாட்டல் பெறுவதற்காக வருவார்கள்.

இவர்களின் மக்கள் வட்டம் மிகவும் விசாலமானதாக இருந்தது. இவர்கள் சிந்து மொழியில் ஒரு நூலையும் இயற்றினார்கள். அது கல்வியில் திறமைசாலிகளுக்கும், மாணவர்களுக்கும் வழிகாட்டல் வழங்குவதில் மிகவும் முக்கியத்துவம் வகிக்கிறது. இது மட்டுமின்றி சிந்து மாகாணத்தின் டாஹிர் கோத்திரத்தைப் பற்றி அகராதியில் இருந்த உள்ளடக்கத்தில் இழிவுபடுத்தும் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவர்கள் திருக்குர்ஆனின் கட்டளைகளின் ஒளியில் பல்வேறு அதிகாரிகளை ஆதாரங்களைக் கொண்டு ஏற்றுக் கொள்ளச் செய்தார்கள். மேலும், அந்த அகராதியில் இருந்து இழிவுபடுத்தும் சொற்களை நீக்க வைத்தார்கள்.

அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

(அடுத்து) ஒரு குறிப்பு உள்ளது. அது பேராசிரியர் டாக்டர் முஹம்மது ஷரீஃப் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் இன்றைய நாட்களில் அமெரிக்காவில் இருந்தார்கள். இவர்கள் 84 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். 1939-ல் தன்ஸானியாவில் பிறந்தார்கள். இவர்களின் தந்தையார் டாக்டர் ஹபீபுல்லாஹ் கான் ஸாஹிப் மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் தன்ஸானியாவில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். ஷரீஃப் கான் ஸாஹிப் ஆரம்பக் கல்வியைக் காதியானில் பயின்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1954-55இல் வழங்கிய குத்பாக்களின் விளைவாக எட்டாம் வகுப்பு பயிலும்போது வாழ்வை அர்ப்பணித்து விட்டார்கள். பிறகு, 1963 இல் பஞ்சாப் பல்கலைக்கழகத்திலிருந்து தங்கப் பதக்கம் பெற்றவாறு Zoology - லல் எம் எஸ்ஸி முடித்தார்கள். 1996-ல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் Zoology-யில் phd முடித்தார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க 1963-ல் தமது பணிவு ஓய்வு வரை இவர்களுக்கு 35 ஆண்டுகள் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. உலகம் முழுவதிலும் உள்ள இதழ்களில் பேராசிரியர் அவர்களின் சுமார் 250 ஆய்வுத் தாள்கள் வெளியாகியுள்ளன. இவர்களின் முதல் ஆய்வுக் கட்டுரை 1972ல் வெளியானது. இவர்களின் கட்டுரை ஊர்வனங்கள பற்றி இருந்தது. மிகவும் ஆய்வு செய்து வந்தார்கள். பாம்புகள் மற்றும் பல்லிகள் ஆகியவை தொடர்பாக இயற்கையின் நிலத்தின் பூச்சிகள் பற்றி பெரிதும் ஆய்வு செய்தார்கள். நாங்களும்; நானும் இவர்களின் மாணவனாக இருந்துள்ளேன். எங்களுடைய வகுப்பை அழைத்துச் செல்வார்கள்.

பிறகு இயற்கையில் என்னென்ன பொருள்களில் எப்படிப்பட்ட பூச்சிகள் காணப்படுகின்றன? என்னென்ன வகையானவை உள்ளன? என்று பொருள்களைக் காட்டுவார்கள். 2002-ல் இவர்களுக்குப் பாகிஸ்தானில் ZOOLOGIST OF THE YEAR (அதாவது அந்த வருடத்திற்கன விலங்கியல் நிபுணர்) என்ற விருது வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் முஜீபுல்லாஹ்: சவ்த்ரி ஸாஹிப் எழுதுகிறார்கள்: 2008-ல் நான் பள்ளிவாசலுக்கான சந்தாவை சேகரிப்பது தொடர்பாகப் பேசியபோது இவர்கள், எங்களிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்று கூறினார்கள். ஆனால், இவர்கள் வீட்டிற்கு வாருங்கள் என்றார்கள்.

வீட்டிற்குச் சென்றபோது இவர்களின் துணைவியாரும் வந்துவிட்டார்கள். ஒரு சுருக்கு பையை எடுத்து முன்னால் வைத்துவிட்டார்கள். அவர்களின் பெற்றோர் தரப்பிலிருந்து அல்லது கணவர் வீட்டிலிருந்து வழங்கப்பட்டிருந்த நகை என என்ன கிடைத்ததோ இதுதான் எங்களிடம் உள்ளது. இதை எடுத்துச் செல்லுங்கள் என்று அதை முன்னால் வைத்து விட்டார்கள். மிகவும் ஒழுக்கமான இயல்புடையவராகவும், பணிவுடைய மனிதராகவும் இருந்தார்கள். மாணவர்களுடன் எப்பொழுதும் கூடி கலந்து நண்பர்களைப் போன்று இருந்து வந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக !

இவர்களின் மூத்த மகன் ஸஃபருல்லாஹ் ஸாஹிபும் எழுதுகிறார்கள்: இவர்களின் சில விஷயங்கள் பிறகு முன் வந்துள்ளன. அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து சில விஞ்ஞானிகள் சந்திப்பதற்காக ரப்வாவுக்கு பேராசிரியர் டாக்டர் ஷரீஃப் கான் ஸாஹிப் அவர்களிடம் வந்தார்கள். அந்த அறிவியலாளர்களின் கூற்றுப்படி பாகிஸ்தானில் ரிப்போடாலஜி அதாவது ஊர்வனங்கள் குறித்து ஷரீஃப் கான் ஸாஹிப் அவர்களை விடப் பாகிஸ்தானில் திறமைபெற்றவர் யாரும் இல்லை என்று கூறுகின்றார்கள். மிகவும் திறமைசாலியாக இருந்தார்கள்.

இவர்களின் மகன் ராஷித் ஸுபைர் கூறுகின்றார்: இளமைப் பருவத்திலிருந்தே தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், தொழுகை மற்றும் நோன்பை முறையாக பேணுபவராகவும் இருந்தார்கள். கமர் பள்ளிவாசலில் தொழுகைக்கு இமாமத்தும் செய்து வந்தார்கள். ஜமாஅத்தான தொழுகை மட்டுமின்றி திருக்குர்ஆன் ஓதுதல் மற்றும் தஃப்ஸீர் படித்தல் ஆகியவற்றிற்கு அதிக ஆர்வம் இருந்தது. அதில் அதிகம் படித்தும் வந்தார்கள்.

இவர்களின் மகன் வழிப்பேரன் மஷ்ஹூத் கான் கூறுகின்றார்: பெரும் ஆன்மிக நபராக இருந்த எங்கள் தந்தை வழிப்பாட்டனார் அவர்களுக்கு ஆழமான அறிவியல் புரிதலும் இருந்தது. இறைவன் இருக்கின்றான் என்பதற்கான சான்று இயல்பில் உள்ளது என்பதை அவர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இவர்கள் தொழுகைகளைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதல் மற்றும் திருக்குர்ஆன் அதிகமாக ஓதுதல் ஆகியவற்றில் அதிகம் அழுத்தம் கொடுத்து வந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் மிகவும் அதிகமான அன்பு இருந்தது. எப்பொழுதும் காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கடிதம் எழுதுவார்கள். குத்பாக்களைக் கேட்பதன் பக்கம் இவர்களின் கவனமும் இருந்தது. வீட்டு மக்களுக்கும் கவனமூட்டுவார்கள். மேலும், ஊக்கப்படுத்துவார்கள். அல்லாஹ் இவர்களுடைய சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்:
மவ்லவி
அத்தாவுல் முக்ஃனீ

* * * * * * * *


உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

வேண்டுவதற்கு எந்தவொரு அவசியமும் இருப்பதில்லை. மேலும் இந்த விஷயமும் நினைவில் இருக்கட்டும்; அதாவது, எந்த மக்கள் அடையாளத்தை காண்பதற்கு ஆசைபடுபவர்களாக இருக்கின்றனரோ மேலும், வலியுறுத்துவார்களோ அவர்கள் ஈமானில் உறுதியானவர்களாக இருக்க முடியாது. இன்னும் கூறப்போனால், அவர்கள் எப்போதும் அபாயகரமான நிலையில் இருக்கின்றனர். மறைவானவற்றின் மீதான ஈமானின் கனிகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஏனெனில், மறைவானவற்றின் மீதான ஈமானிற்குள் அழகிய எண்ணம் என்ற நன்மையின் ஒரு செயலும் இருக்கின்றது. அதிலிருந்து அவசரக்காரர் இழப்பிற்குரியவராக இருக்கின்றார். அவர் அடையாளத்தைக் காண்பதற்கு அவசரப்படுகின்றார். மேலும், அதற்கு அவர் அழுத்தம் கொடுக்கின்றார். மஸீஹ்(அலை) அவர்களின் சீடர்கள் உணவுத் தட்டை இறக்கும்படி அழுத்தம் கொடுத்தனர். அப்போது இறைவன் அவர்களுக்கு தண்டனையும் கொடுத்தான். மேலும், இறைவன் கூறினான்: நாமோ உணவுத் தட்டை இறக்குவோம். ஆனால், இறங்கிய பிறகு எவர்கள் நிராகரிப்பார்களோ அவர்கள் மீது கடுமையான தண்டனை இறங்கும். திருக்குர்ஆனில் இந்த சம்பவத்தை குறிப்பிட்டதால் இந்த பயன் உள்ளது. அதாவது, சிறந்த ஈமான் எது? என்று கூறப்பட்டுள்ளது. அசல் விஷயம் இதுவாகும். அதாவது, அல்லாஹ்வின் அடையாளங்கள் வெளிப்படையாக நிகழ்கின்றன. ஆனால், அவற்றுடன் ஒரு புறம் சான்றுகளை முழுமை செய்வதும் நோக்கமாக இருக்கின்றது. மற்றொரு பக்கம் சமுதாயத்தை சோதிப்பதற்காகவும் அமைகின்றது. எனவே அவற்றுள் சில விவகாரங்கள் இவ்வாறும் இருக்கின்றது: அவை தம்முள் ஒரு சோதனையையும் கொண்டுள்ளன. மேலும், பொதுவான நடைமுறை என்னவாக இருக்கின்றது என்றால், அடையாளம் வேண்டக் கூடியவர்கள் அவசரக்காரர்களாகவும் மற்றும் அழகிய எண்ணத்தில் பங்கு பெறாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களின் இயல்பில் ஓர் ஐயத்தையும், சந்தேகத்தையும் உருவாக்குகின்ற ஒரு விஷயம் இருக்கின்றது. அப்போதுதான் அவர்கள் அடையாளத்தை வேண்டுகின்றனர். எனவே அடையாளத்தைக் காணும்போது பின்னர் அறிவீனமான முறையில் அதற்கு விளக்கங்களும் கொடுக்கத் துவங்கி விடுகின்றனர். மேலும், அவரை மாய வித்தைக்காரர் என்றும் கூறுகின்றனர்; சிலநேரம் வேறு ஏதாவது பெயர் சூட்டுகின்றனர். சுருக்கமாக, சந்தேகத்தை உருவாக்குகின்ற அவர்களின் இயல்பானது அவர்களை உண்மையான விவகாரத்திலிருந்து தொலைவில் கொண்டு சென்று விடுகின்றது. எனவே நான் உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன்: எந்த ஈமான் அபூபக்ர் (ரலி) மற்றும் ஸாஹபிகளிடம் இருந்ததோ அந்த ஈமானை நீங்கள் உங்களிடத்தில் உருவாக்குங்கள் என்று நான் உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன். அதில் அழகிய எண்ணமும், பொறுமையும் உள்ளது. மேலும் அது ஏராளமான அருட்களையும் கனிகளையும் வழங்கக் கூடியதாகும். அடையாளம் கண்ட பிறகு ஒப்புக் கொள்வதும், ஈமான் கொள்வதும் தமது ஈமானை நிபந்தனைக்குட்பட்டதாக ஆக்குவதாகும். இது பலவீனமானதாகும். மேலும் பொதுவாக, கனிகளைத் தருவதில்லை. ஆயினும், மனிதன் அழகிய எண்ணத்துடன் ஈமான் கொள்கின்றபோது பின்னர் அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் ஈமானை அதிகரிப்பதன் காரணியாகவும், உள்ளத்தை திறப்பதற்கான காரணளியாகவும் இருக்கின்றன, இறைவன் அவரை சுயமே அடையாளமாகவும், ஆயத்துல்லாஹ்வாகவும் ஆக்கிவிடுகின்றது. மேலும், இக்திராஹீ அடையாளத்தை இதன் காரணமாகவே எந்த நபியும் காட்டவில்லை. உண்மையான நம்பிக்கையாளர் என்ன செய்ய வேண்டுமென்றால், அவர் ஒருபோதும் அடையாளங்களை பார்ப்பதன் மீது தனது ஈமானை அடித்தளமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 496 - காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு)

* * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

அநேகமாக அவர்கள் அவரைத் திணறடிக்கும் வகையில் அவர் மேல் விழுகின்றனர்(அல் ஜின்:21).

சூஃபிமார்களோ இந்த அளவிற்கு விவாதித்துள்ளனர்: அதாவது அப்து என்ற அந்தஸ்து எல்லா அந்தஸ்துகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த மற்றும் மிகவும் மேலான படித்தரம் ஆகும் என்று மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர்த்து யாரும் முழுமையான அடியார் இல்லை. وَمَآ اَرۡسَلۡنٰكَ اِلَّا رَحۡمَةً لِّلۡعٰلَمِيۡنَ ﴿١٠٨﴾

(பொருள்: நாம் உம்மை அனைத்துலகங்களுக்கும் அருட்கொடையாக ஆக்கி அனுப்பியுள்ளோம்) என்று அல்லாஹ் கூறியிருப்பதைப் போன்று

اٰتَيۡنٰهُ رَحۡمَةً مِّنۡ عِنۡدِنَا

என்பதிலும் அன்னாரைக் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. عَلَّمۡنٰهُ مِنۡ لَّدُنَّا عِلۡمًا

.

பொருள்:முன்னவர்களுக்கு வழங்கப்பட்டிராத சிறப்பான ஞானம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சூரா அந்நிஸாவில் அல்லாஹ் கூறுகின்றான்: தூதரே! நீர் முன்னர் அறிந்திராத ஞானத்தை நாம் உமக்கு கற்று தந்துள்ளோம். மேலும், இதன் மூலமாக அல்லாஹ்வின் (மா)பெரும் அருள் உம்மிடத்து உள்ளது. (அந்நிஸா: 114)

இதேபோன்று அல்லாஹ் கூறுகின்றான்:

وَعُلِّمۡتُمۡ مَّا لَمۡ تَعۡلَمُوۡۤا اَنۡتُمۡ وَلَاۤ اٰبَآؤُكُمۡ

பொருள்: இந்த நபியின் மூலமாக இதற்கு முன்னர் எவருக்கும் வழங்கப்பட்டிராத ஞானம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (அல் அன்ஆம்: 92) முன்னவர்களில் மூஸாவும், ஈஸாவும் அடங்குவர்.

இதே போன்று அல்லாஹ் கூறுகின்றான்:

وَ اِنَّكَ لَتُلَقَّى الۡقُرۡاٰنَ مِنۡ لَّدُنۡ حَكِيۡمٍ عَلِيۡمٍ ﴿٧﴾

பொருள்: நுட்பமான ஞானம் மிக்கவனும், நன்கு அறிந்தவனுமாகிய இறைவன் புறமிருந்து உமக்கு திருக்குர்ஆன் கற்றுத் தரப்பட்டுள்ளது.(27:7)

இதே போன்று وَقُلۡ رَّبِّ زِدۡنِىۡ عِلۡمًا

(தாஹா: 115) என்ற துஆ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொருள்: இறைவா! எனது ஞானத்தை மேலும் அதிகரிக்கச் செய்வாயாக !எனது ஞானத்தை மேலும் அதிகரிக்கச் செய்வாயாக ! என்று முஹம்மதே! நீர் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருப்பீராக!

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 476, காதியான் பதிப்பு,2010-ம் ஆண்டு)

* * * * *

## ஹுஸூர் சொற்பொழிவு..12ம் பக்க தொடர்ச்சி

ஒரு பைசா கூட வெளியே அனுப்பப்படாது. தங்களுக்கான சிகிச்சைகக்கான செலவை தாங்க முடியாத மக்கள் அதனை மானியத்துடன் பெற்றுக் கொள்வதற்காகவும் அல்லது முடிந்தால் அதனை அவர்கள் இலவசமாக பெற்றுக் கொள்வதற்காகவும் வேண்டி நோயாளிகளுக்கான கட்டணம் மூலம் கிடைக்கப்பெறும் எந்த ஒரு வருவாயும் மீண்டும் இங்கேயே முதலீடு செய்யப்படும். இதனை தவிர கிடைக்கக் கூடிய அதிகப்படியான வருவாயும் இந்த மருத்துவ மனையின் வசதிகளை பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அல்லது மனித இனத்திற்கு சேவையாற்றுவதற்கான புதிய வழிவகைகளுக்கு பொருளுதவி செய்வதற்காகவும் உபயோகப்படுத்தப்படும். எங்களுடைய வழிவகைகளுக்கு பொருளுதவி செய்வதற்காகவும், உபயோகப்படுத்தப்படும். எங்களுடைய முந்தைய மனிதநேய திட்டங்கள் நான் கூறியது உண்மை என்பதற்கு சான்றளிக்கின்றன.

நாங்கள் எங்கு பள்ளிக் கூடங்கள் அல்லது மருத்துவ மனைகளை கட்டினாலும், நாங்கள் எப்போதுமே அதன் வருவாயை அந்த நாட்டை விட்டு வெளியே எடுத்துச் சென்றது கிடையாது. மாறாக, நாங்கள் அந்த நாட்டின் மக்கள் பயனடையக் கூடிய வகையில் அதனை உள்ளூரிலேயே எப்பொழுதும் முதலீடு செய்து வந்துள்ளோம். இங்கே குவாத்தமாலாவிலும் இவ்வாறே நடக்கும். இறைவன் நாடினால் (இன்ஷா அல்லாஹ்). உங்கள் நாட்டிற்கு நாங்கள் சேவை செய்வதற்கான அர்ப்பணிப்பின் முடிவாக இது இருக்காது.மாறாக, இது ஒரு துவக்கம் மட்டுமே ஆகும். நிச்சயமாக என்னுடைய பிரார்த்தனையும் நேரிய நம்பிக்கையும் என்னவென்றால் மனிதநேய திட்டங்களுக்கு முதன்மையானதாக இருக்கும். நாங்கள் மனித இனத்திற்கு சேசை செய்வதற்கான எங்களுடைய கடமையையும், எங்களுடைய பொறுப்பினையும் நிறைவேற்றுவதற்காக என்றென்றும் தொடர்ந்து எங்களுடைய முயற்சிகளை அதிகப்படுத்திட வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.

நம்முடைய எதிர்காலத்தை நாம் பாதுகாத்திடவும் நம்முடைய பிள்ளைகளும் இனிவரும் தலைமுறையினரும் வாழ்வதற்கான ஒரு மேன்மையடைந்த உலகினை நமக்கு பின்னால் விட்டு செல்வதற்காகவும், மனிதயினத்திற்கு சேவை செய்வதற்கான ஆன்மாவானது சமுதாயத்தில் நிரந்தரமாக வேரூன்றிட வேண்டும் என்றும் நான் பிரார்த்தனை செய்கிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்விஷயத்தில் நம் அனைவரையும் நமது கடமைகளை நிறைவேற்றிட செய்வானாக. ஆமீன்! இந்த வார்த்தைகளுடன் இன்றைய நிகழ்ச்சியில் நம்முடன் கலந்து கொண்டமைக்காக நம்முடைய விருந்தினர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி!

தமிழாக்கம்:
ஷேக் ஃபயாஸ் அஸ்லம்

* * * * * * * *

## மனித குலத்திற்கு சேவையாற்றுதல் - அல்லாஹ்வை வணங்குவதின் ஒரு வடிவம்

**மத்திய அல்லது தென் அமெரிக்காவில் மனிதம் முதலில் ( HUMANITYFIRST) அமைப்பினால் எழுப்பப்படும் முதல் மருத்துவமனை இன்று திறந்து வைக்கப்படுகின்றது. இதனை பார்க்கும்போது நாங்கள் இதனை மிகவும் முக்கியமான நிகழ்வாகவும்,மேலும் ஓர் மைல்கல்லாக விளங்கக் கூடிய நிகழ்வாகவும் கருதுகின்றோம்**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மனிதர்களுக்கு, மனித இனத்திற்கு சேவை செய்வதற்கு எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது. அது எங்களுடைய சொந்த சமூகத்தின் திட்டங்களின் மூலமாகவோ அல்லது மனிதம் முதலில் (HUMANITY FIRST)அமைப்பு மூலமாகவோ அல்லது பிற தொண்டு நிறுவனங்கள் மற்றும் நல்ல விஷயங்களை ஆதரிப்பதன் மூலமாகவோ நடந்திருக்கின்றது.**

**இந்த நவீன காலத்தில் எங்களுடைய நம்பிக்கையின்படி, இந்த உலகத்தை இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கொண்டு ஒளிமயமாக்குவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அந்த நபர் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் தோற்றுனர்**

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குவாத்தமாலாவில் நாஸிர் மருத்துவ மனை திறப்பு விழாவையொட்டி அக்டோபர் 23,2018 அன்று ஆற்றிய உரை

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

மதிப்பிற்குரிய அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு. அல்லாஹ்வின் சாந்தியும் அருட்கொடைகளும் உங்கள் அனைவரின் மீது உண்டாகட்டுமாக.

முதலில், நான் இன்று இங்கு குவாத்தமாலாவில் நம்முடைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் நம்முடைய அனைத்து விருந்தினர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சந்தேகத்திற்கிடமின்றி இன்றைய நாள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு ஒரு மிகப்பெரும் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்திற்கு காரணமாக இருக்கின்றது. ஏனெனில், மத்திய அல்லது தென் அமெரிக்காவில் மனிதம் முதலில்(HUMANITY FIRST) அமைப்பினால் எழுப்பப்படும் முதல் மருத்துவமனை இன்று திறந்து வைக்கப்படுகின்றது. இதனை பார்க்கும்போது நாங்கள் இதனை மிகவும் முக்கியமான மேலும், ஓர் மைல்கல்லாக விளங்கக் கூடிய நிகழ்வாகவும் கருதுகின்றோம்.

மனிதம் முதலில் (HUMANITY FIRST)என்பது ஒரு சுதந்திரமான தொண்டு நிறுவனமாக மேலும், அது தனக்கென்று தனியான அதிகாரத்தையும், திட்டங்களையும் கொண்டிருக்கும் அதேவேளையில் அது முதன்முதலில் அஹ்மதிய்யா சமூகத்தினால் தான் உருவாக்கப்பட்டது. மேலும் அது தொடர்ந்து அஹ்மதி முஸ்லிம்களால் தான் நிர்வகிக்கப்படுகின்றது. தங்களுடைய பொருளாதார நன்கொடைகளை கொண்டும் இன்னும் பல வழிகளிலும் உலகெங்கிலும் இருக்கக் கூடிய அஹ்மதி முஸ்லிம்கள் அதனுடைய மனிதநேய திட்டங்களின் செயல்பரப்பை அதிகரிப்பதற்காகவும், அதனை இன்னும் அதிகமாக எட்ட வைப்பதற்காகவும் மனிதம் முதலில் (HUMANITY FIRST) அமைப்பின் முயற்சிகளை ஆதரிக்கின்றார்கள். எனவே மனிதம் முதலில் (HUMANITY FIRST) என்பது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் ஆழமான மற்றும் நிலையான தொடர்பு கொண்டதாக இருக்கின்றது. எனவே இன்றைய நாள் என்பது மனிதம் முதலில் (HUMANITY FIRST)என்னும் அமைப்பிற்கு மட்டுமல்லாமல் உலகெங்கிலும் உள்ள அனுமதி முஸ்லிம்களுக்கும் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாகும்.

நாங்கள் ஏன் இந்த மருத்துவமனையை கட்டியுள்ளோம்! என்று நீங்கள் ஆச்சரியம் அடையலாம். இதற்குரிய பதிலானது மிகவும் எளிதானதாகும். இது ஒரே ஒரு நோக்கத்திற்காக மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அது என்னவென்று மிகவும் எளிதாக சொல்ல வேண்டுமென்றால் இந்த நாட்டின் மக்களுக்கு மிகவும் உயர்தரமான சுகாதாரத்தை வழங்குவதன் மூலம் மனித இனத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதே ஆகும். மேலும், ஆரம்பத்திலேயே நான் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், இந்த நிறுவனத்தை நிறுவியிருப்பதன் மூலம் இந்த நாட்டிற்கான எங்களுடைய சேவைகள் முடிந்து விடவில்லை. மாறாக, மனிதம் முதலில் (HUMANITY FIRST)என்னும் அமைப்பினால் இந்த பகுதியில் நிறுவப்பட உள்ள எத்தனையோ மனிதநேய திட்டங்களுக்கு இது ஒரு முன்னோடியாக விளங்க வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கின்றேன். நிச்சயமாக, உலகெங்கிலும் உள்ள மக்களின் துயர் நீக்குவதற்கு அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு மேலும் வாய்ப்புகளை வழங்குவதற்கு மனிதம் முதலில் (HUMANITY FIRST) அமைப்பின் பணியை உந்தக் கூடிய ஒரு தொடக்கக் களமாக இந்த மருத்துவமனையின் துவக்கம் இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். மேலும் பிரார்த்தனையும் செய்கிறேன்.

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு உதவுவதற்கும், சேவை ஆற்றுவதற்கும் ஏன் ஒரு முஸ்லிம் சமுதாயமனது இந்த அளவு வேட்கையும், உறுதியும் கொண்டுள்ளதே என்று ஒருவேளை நம்முடைய விருந்தினர்களில் சிலர் ஆச்சரியப்படலாம் அல்லது குழப்பமும் அடையலாம். இந்த கேள்விக்கு பதில் அளிப்பதற்கு நான் கட்டாயம் என்ன விளக்க வேண்டுமென்றால் அது உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மனிதர்களுக்கு, மனித இனத்திற்கு சேவை செய்வதற்கு எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது. அது எங்களுடைய சொந்த சமூகத்தின் திட்டங்களின் மூலமாகவோ அல்லது மனிதம் முதலில் (HUMANITY FIRST)அமைப்பு மூலமாகவோ அல்லது பிற தொண்டு நிறுவனங்கள் மற்றும் நல்ல விஷயங்களை ஆதரிப்பதன் மூலமாகவோ நடந்திருக்கின்றது. உதாரணத்திற்கு கடந்த இருபது, முப்பது வருடங்களாக அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் ஆஃப்ரிக்காவில் பல்வேறு மருத்துமனைகளையும் பள்ளிக்கூடங்களையும் திறந்து இருக்கின்றது. இங்கு உள்ளூர் மக்களுக்கு அவர்களுடைய இனம், மதம் அல்லது சமுதாய பின்புலன்களை பொருட்படுத்தாமல் சுகாதாரமும், சிறந்த கல்வியும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆஃப்ரிக்காவில் உள்ள எங்களுடைய மருத்துமனைகளில் சிகிச்சை அளிக்கப்படும் பெரும்பாலான நோயாளிகள் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவர். மேலும், எங்களுடைய பள்ளிக்கூடங்களில் படித்து வரக் கூடிய 90 சதவிகிதம் மாணவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவர். எனவே நாங்கள் எந்த சமுதாயதம் மற்றும் மக்களுக்கு எதிராகவும் பாரபட்சம் காட்டுவது கிடையாது. மேலும், எங்களுடைய சொந்த உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்குவதும் கிடையாது.

கல்வியைப் பொருத்த வரை நாம் வழங்கக் கூடிய பள்ளிக் கல்வியானது தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை உள்ளதாகும். நம்முடைய நோக்கமானது எல்லா பிள்ளைகளும் எழுத்தறிவு உள்ளவர்களாக மேலும், உறுதியான கல்வி அடித்தளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதன் மேல் அவர்கள் தங்களுடைய எதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்ள முடியும் என்பதாகும். இன்னும் நாங்கள் திறமையான மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்குகின்றோம். அது இல்லை என்றால் அவர்கள் தங்கள் உயர்கல்வியை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் இல்லாமல் போகலாம். இதன் மூலம் அவர்கள் தங்களுடைய ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் மேலும் தங்களுக்காகவும் தங்கள் மக்களுக்காகவும் தங்கள் நாட்டிற்காகவும் ஒரு சிறந்த எதிர்காலத்தை கட்டமைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நேரடியாகவோ அல்லது மனிதம் முதலில்(HUMANITY FIRST)அமைப்பு மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ மனித குலத்திற்கு சேவையாற்றுவதிலும், வறுமையில் வாழக் கூடிய மக்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதிலும் மேலும் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதிலும் அவர்களுக்கு உதவி செய்வதிலும் ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக இருக்கின்றது.

நாங்கள் எந்த புகழ்ச்சியையும் தேடுவதில்லை. மேலும் எங்களுடைய முயற்சிகளுக்கு பகரமாக எந்தக் கூலியையும் கேட்பதில்லை. ஏனெனில், நாங்கள் எங்களுடைய மார்க்கம் எங்களுக்கு எதனை செய்ய சொல்கின்றதோ அதனை மட்டுமே செய்து கொண்டிருக்கின்றோம். பிறருக்கு சேவை ஆற்றுவதற்கான எங்களுடைய உத்வேகமும் எங்களுடைய ஆசையும் முழுக்க முழுக்க இஸ்லாத்தின் போதனைகளால் தான்

உந்தப்பட்டிருக்கின்றது. இஸ்லாத்தின் ஸ்தாபகரான புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட புனித குர்ஆனே எந்த ஓர் உண்மையான முஸ்லிமுக்கும் வழிகாட்டும் ஒளியாக இருக்கின்றது. கஷ்டத்தில் இருக்கின்ற அல்லது ஏதாவது ஒரு வகையில் இழப்பிற்காளானவர்களின் தேவைகளை நிறைவேற்றவும், மனித இனத்திற்கு சேவை செய்யவுமே புனித திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு மீண்டும், மீண்டும் கட்டளையிடுகின்றது. அது முஸ்லிம்கள் தன்னலமற்றவர்களாக மற்றவர்களுடைய அன்பினால் ஆட்கொள்ளப்பட்டவராக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றது. மேலும் அமைதிக்காவும், பிற மக்களுடைய நலனுக்காகவும் தியாகங்கள் செய்வதற்கு நாங்கள் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்று அது கூறுகின்றது.

உதாரணத்திற்கு அதிகாரம் 3 வசனம் 111-ல் எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அதாவது முஸ்லிம் என்பவர் எவரென்றால், அவர் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பார். இங்கு திருக்குர்ஆன் கூறும் உண்மையான முஸ்லிம்கள் யாரென்றால் அவர்கள் நன்மையை ஊக்குவிக்கக் கூடிய மக்களாக இருப்பர். தீமையில் இருந்தும் விலகி இருப்பார்கள். மேலும், மற்றவர்களையும் நன்மையான காரியங்களை செய்ய ஊக்குவிப்பார்கள். இறைவனின் படைப்புகளுக்காக மனதில் வேதனையை உணர்பவர் மட்டுமே. திருக்குர்ஆன் ஆசைபடக் கூடிய வழியில் மற்றவர்களின் நலனில் அக்கறை கொண்டவராக அனுதாபம் கொண்டவராக இருக்க முடியும். பிறருக்கு கெடுதல் செய்யும் எண்ணத்தில் இருந்தும், சுயநலத்தில் இருந்தும் உங்களுடைய இதயம் தூய்மையாகவும், சுதந்திரமானதாகவும் இருந்தால் மட்டுமே இத்தகைய மனித இனத்தின் மீதான நேரிய அன்பு சாத்தியமாகும்.

திருக்குர்ஆனின் அதிகாரம் 2 வசனம் 84-ல் எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்களை எல்லா நேரங்களிலும் கருணையுடன் பேசும் படியும் பிற மக்களுடைய உணர்வுகளை கவனத்தில் கொள்ளுமாறும் மேலும், சமுதாயத்தின் பாதிப்பிற்குள்ளான உறுப்பினர்களான அனாதை குழந்தைகள் மேலும், வறுமையிலோ அல்லது ஆதரவற்ற நிலையிலோ வாழக் கூடியவர்கள் ஆகியோரை நேசிக்கும்படியும் அவர்களை பாதுகாக்கும்படியும் வலியுறுத்திக் கூறுகின்றது. அதன் பிறகு, அத்தியாயம் 51, வசனம் 20-ல் திருக்குர்ஆன் கூறும் ஓர் உண்மையான முஸ்லிமுடைய தனிச் சிறப்பு என்னவென்றால், அவர் எல்லாம் வல்ல இறைவனின் படைப்புகளின் நலனிலும் அக்கறை காட்டுவார் என்றும் அவர் தேவையுடையோருக்கு அவர்கள் அவர்களிடம் உதவி கேட்டாலும், கேட்காவிட்டாலும் அவர்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களை ஆதரிக்கவும் செய்வார் என்று கூறுகின்றது. எனவே ஒரு முஸ்லிமிற்கு, பிறர் ஒருவர் அவரிடம் உதவி கேட்கும் வரை காத்திருப்பது மட்டும் போதுமானது அல்ல. மாறாக, அவருடைய கடமை என்னவென்றால், பிறருடைய துயரங்களை புரிந்த கொள்வதும் மேலும் அவர்கள் தங்களுடைய சவால்களையோ அல்லது பிரச்சனைகளையோ வெற்றி கொள்வதற்கு என்னென்ன தியாகங்கள் வேண்டுமோ அதனை செய்திடவும் வேண்டும் என்பதாகும்.

மேலும் அத்தியாயம் 90, வசனங்கள் 15-17ல் பசியோடு இருப்பவர்களுக்கு உணவு அளிக்குமாறும், பிறருடைய வலியை தன் வலியைப் போல உணர்வதற்கும், மேலும் அனாதைகளை நேசிக்கும்படியும் மேலும் தேவையில் இருக்கின்ற எவருக்கும் உதவுமாறும் குறிப்பாக வறுமையில் மூழ்கி இருப்போருக்கு உதவுமாறும் அல்லது பாதுகாப்பில்லாமல் பலவீனமாக இருப்போருக்கு உதவுமாறும் முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். சமுதாயத்தால் கைவிடப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும்படியும், அவர்களை நேசிக்கும்படியும், மேலும் அவர்களுடைய பாரங்களின் சுமையை தங்கள் தோள்களில் சுமக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் முஸ்லிம்கள் போதிக்கப்பட்டுள்ளார்கள். முஸ்லிம்கள் பின்தங்கிய மக்களுக்கு உதவக் கூடிய கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கக் கூடியவர்களாக, கண்ணியத்துடன் வாழக் கூடியவர்களாக மேலும் நம்பிக்கையற்ற சூழல்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களாக முடியும். இதற்கு பதிலாக, முஸ்லிம்கள் பெருமளவில் ஆன்மிகத்தைக் கொண்டு நற்கூலி வழங்கப்படுவர் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. அது அவர்களை எல்லாம் வல்ல இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும். மேலும், அவர்களை அவனுடைய திருப்தியை பெற்றுக் கொள்பவர்களாக்கி விடும்.

இவ்வாறே அதிகாரம் 2, வசனம் 196-ல் புனித குர்ஆன் கூறுவது என்னவென்றால், ஒரு மனிதர் தன்னை அவமானம், சீரழிவு மற்றும் பாழாக்குவதில் இருந்தும் காத்துக் கொள்ள விரும்பினால் அவர் கருணையுடையவராக தாராள குணம் கொண்டவராக மேலும், பிறரிடம் எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல் நன்மை செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். அதிகாரம் 4, வசனம் 37-ல் புனித குர்ஆன், முஸ்லிம்கள் தங்கள் அண்டை அயலாரின் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று கூறுகின்றது. மேலும், அது வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால் தேவையுடையோர் மற்றும் அனாதைகளின் உரிமைகளை நிறைவேற்றுவது ஒவ்வோர் உண்மையான முஸ்லிமின் கடமையாகும் என்பதாகும். அது முஸ்லிம்களை கருணை, தயாளம் குணம் கொண்டவர்களாகவும் மேலும், தங்களின் கீழ் இருக்கக் கூடிய ஒவ்வொருவரையும் பொறுமை மற்றும் நேசத்துடன் நடத்த வேண்டும் என்றும் பணிக்கின்றது. உதாரணத்திற்கு ஒரு முஸ்லிம் அவருக்குக் கீழ் பணி புரியக் கூடிய ஒருவரை கொண்டிருந்தால் அவர்கள் கருணையுடனும், தயாள குணத்துடனும் நடத்தப்பட வேண்டும். மேலும், அதிகாரம் 47, வசனம் 39-ல் திருக்குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்களை பிறருக்கு உதவுவதற்காக தங்களுடைய செல்வங்களை செலவு செய்யச் சொல்கின்றான். இவ்வாறு செய்ய விருப்பமற்றவர்கள் கருமிகள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளனர். மேலும், அத்தகைய கருமித்தனமான வழிகளை அல்லாஹ் விரும்புவதில்லை என்றும் அவை ஒரு மனிதனின் ஆன்மாவை இருளாக்குவதற்கு காரணமாகி விடுகின்றன என்றும் திருக்குர்ஆன் கூறுகின்றது.

நான் இங்கே குறிப்பிட்ட எல்லா வசனங்களும், எந்த உண்மையை வலியுறுத்திக் கூறுகின்றன என்றால், முஸ்லிம்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நேசத்தை அடைய விரும்பினால் அவர்கள் முதலில் இறைவனுடைய படைப்பின் மீது நேசம் காட்ட வேண்டும் என்பதாகும். இந்த வசனங்கள் மிகத் தெளிவாக விவரிப்பது என்னவென்றால், இஸ்லாத்தின அடித்தளமும் அதன் உறுதியான அடிப்படையும் மனித இனத்திற்கு சேவை ஆற்றுவது என்பதாகும். இஸ்லாம் என்பது ஊடகங்களில் பொதுவாக வரையப்படுவது போன்ற ஒன்றல்ல. மாறாக, அது தீவிரவாதம், வன்முறை அல்லது பயங்கரவாதத்தினை கொண்ட மார்க்கம் அல்ல. மாறாக, அது நேசம், கருணை மற்றும் சகிப்புத் தன்மையைக் கொண்ட மார்க்கம் ஆகும் என்று நீங்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் இந்த திருக்குர்ஆனின் வசனங்களை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் நோக்கம் ஆகும். இஸ்லாம் மனித இனத்திற்கு சேவையாற்றுவதை தன்னை பின்பற்றுபவர்கள் மீது ஏற்படுத்தக் கூடிய அடிப்படைக் கடமையாக கருதக் கூடிய ஒரு மார்க்கம் ஆகும். எனவே ஓர் உண்மையான முஸ்லிமால் கடின உள்ளம் கொண்டவராக இருக்கக் கூடியவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பது எப்படி சாத்தியமாகும்?

திருக்குர்ஆனின் சில மேற்கோள்களை வழங்கிய பிறகு, நான் மனித இனத்திற்கு சேவை செய்வது தொடர்பாக இஸ்லாத்தின் நிறுவனர் புனித நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய உதாரணத்தை இப்பொழுது முன் வைக்கின்றேன். புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய சீடர்களை வன்முறையாளர்களாக்குவதற்கு ஊக்குவித்த ஒரு போர்க் குணம் கொண்ட தலைவர் ஆவார் (நவூதுபில்லாஹ்) என்று இந்த நவீன யுகத்தில் அடிக்கடி குற்றஞ்சாட்டப்படுகின்றது. எனினும், மிகவும் தெளிவான விஷயம் என்னவென்றால், இது அன்னாருடைய அருளுக்குரிய குணத்திற்கு எதிராக செய்யப்படும் கொடிய அநீதியான செயலாகும். வேறெதுவும் இதனை விட அதிகமாக உண்மையை விட்டும் தொலைவில் இருக்க முடியாது. இஸ்லாத்தில் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நம்பிக்கைகளைக் கொண்ட, எல்லா மக்களின் உரிமைகளுக்காகவும் பாடுபடக் கூடியவராக இருந்தார்கள். அவர்கள் ஒப்பிலா கருணையின் ஊற்றாகவும், மேலும் முழு மனித குலத்திற்கும் ஒரு கருணையாகவும் விளங்கினார்கள். அன்னாருடைய ஒவ்வொரு ரத்த நாளத்தில் இருந்தும், தசை நாரிலிருந்தும் மனித இனத்திற்கான நேசம் மற்றும் கருணையின் முடிவில்லா ஓர் ஊற்று பொங்கிக் கொண்டிருந்தது. உதாரணமாக ஒரு முறை, : நான் எப்பொழுதும் பலவீனமானவர்களுடன் இருக்கின்றேன். ஏனெனில், பலவீனமானவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்வது என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வை சென்றடையக் கூடிய ஒரு வழியாகும் என்று புனித நபிகள் நாயகம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும், இஸ்லாத்தின் நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஏழைகளுக்கு உதவக் கூடியவர்கள், அவர்களுடைய வெறுமையான வயிறுகளை நிரப்பக் கூடியவர்கள். மேலும், அவர்களுக்காக மருத்துவ சிகிச்சைகளுக்கான ஏற்பாடு செய்யக் கூடியவர்களிடம் எல்லாம் வல்ல அல்லாஹ் மிகவும் திருப்தி அடைகின்றான் என்று கூறினார்கள். எனவே ஒரு மனிதர் தான் உண்மையான முஸ்லிம் என்று வாதிட்டால், அவருடைய பொறுப்பும், தலையாய கடமையும் என்னவென்றால், கஷ்டங்களை எதிர் கொள்ளக் கூடியவர்களுக்கு உதவுவதும், மேலும் அவர்களுடைய துயரம் மற்றும் இதய வலியை போக்குவதற்குக் கடுமையாக முயற்சி செய்வதும் ஆகும். இந்த நவீன காலத்தில் எங்களுடைய நம்பிக்கையின்படி, இந்த உலகத்தை இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கொண்டு ஒளிமயமாக்குவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அந்த நபர் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் தோற்றுனர் ஆவார்கள். அன்னாரை நாங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும், இமாம் மஹ்தி (நேர் வழிப் பெற்றவர்) என்றும் நம்புகின்றோம். இஸ்லாம் உண்மையில் எத்தகைய மார்க்கம் என்று காண்பிப்பதற்காகவும், அதன் போதனைகளை இவ்வுலகின் எல்லா பகுதிகளுக்கும் பரப்புவதற்காகவும் அன்னார் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

அன்னார் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி போதிப்பதற்காக வந்திருக்கும் அதேவேளையில் தங்களுடைய நம்பிக்கையின் அசல் போதனைகளை மறந்து விட்ட முஸ்லிம்களையும், சீர்திருத்துவதற்காக வந்திருக்கின்றார்கள். மேலும், அவர்களுடைய புனித குர்ஆன் மற்றும் புனித நபி முஹம்மத் (ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட இஸ்லாத்தின் பால்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 16 NOVEMBER 2023 Issue No. 46

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அழைப்பதற்காக வந்திருக்கின்றார்கள். அனைத்திற்கும் மேலாக அன்னார் எல்லாம் வல்ல இறைவன் உடைய உரிமைகளையும் மற்றும் ஒருவர் மற்றவருடைய உரிமைகளையும் வழங்குவது குறித்தும் மனிதகுலத்தின் கவனத்தை தொடந்து ஈர்த்தார்கள். மனித இனத்திற்கு சேவையாற்றுவதும் இறை வணக்கத்தின் ஒரு வடிவம் தான் என்று ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறினார்கள்.

வேறோர் இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னுடைய நிலைமை எத்தகையதாக இருக்கிறது என்றால் எவரேனும் ஒருவர் துக்கத்தில் ஆழ்ந்து இருந்து, நான் கடமையான தொழுகைகளில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அவருடைய துயரத்தை நான் செவியேற்க நேர்ந்தால், என்னுடைய தீவிரமான ஆசை என்னவென்றால், தொழுகையை முறித்து விட்டு அந்த நபருக்கு உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டும். மேலும், அவர்கள் மீது முடிந்த அளவு அன்பினைப் பொழிய வேண்டும் என்பதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்; ஒரு சகோதரருக்கு அவருடைய தேவையின் நேரத்தில் அல்லது கஷ்டத்தின் நேரத்தில் உதவி செய்யாமல் இருப்பது முழுக்க முழுக்க ஒழுங்கீனமும் தவறும் ஆகும்.

மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்: துயரப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒருவருக்கு அல்லது துயரங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்ற ஒருவருக்கு உதவி செய்வதற்கான பொருளாதார வசதிகள் ஒரு மனிதரிடத்தில் இல்லாமல் இருந்தாலும் குறைந்தபட்சம் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் அவர்களுடைய பிரச்சனைகள் நீங்குவதற்காக கண்டிப்பாக ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்திட வேண்டும். நேரிய பிரார்த்தனைக்கு ஒரு மென்மையான மற்றும் தூய்மையான இதயமும் தேவைப்படுகின்றது. எனவே முஸ்லிம்கள் மற்றவர்களுடைய அவலநிலை குறித்து அனுதாபம் கொள்வதும் மேலும், அவர்களுடைய துயரங்களை தங்களுடைய சொந்த துயரங்களைப் போல கருதுவதும் முஸ்லிம்களுக்கு ஒரு கடமையாக இருக்கின்றது என்று அன்னார் (அலை) போதிக்கின்றார்கள்.

மற்றோரு தருணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மறற் எவரையும் விட அதிகமாக நான் மக்களிடம் வேண்டிக் கேட்பது என்னவென்றால், அவர்கள் இந்துக்களை போன்ற முஸ்லிம் அல்லாதவர்கள் இடத்தில் உயர்ந்த நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் நேசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவனின் படைப்புகளையும், அவர்கள் தங்களுடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாக இருப்பது போன்று ஆழ்ந்த அன்புடன் நடத்துங்கள். மனித இனத்தை ஒரு தாய் தனது குழந்தையை நடத்துவது போன்று நடத்துங்கள். இந்த வழியே நீங்கள் பின்பற்ற வேண்டியதாகும். அதுவல்லாமல் நீங்கள் பின்னால் கிடைக்கக் கூடிய ஒரு பலனுக்காக அல்லது பிரதிபலனாக அவர்களிடமிருந்து ஒரு தயவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக நீங்கள் எவரேனும் ஒருவருக்கு உதவுவது கூடாது. அதுபோன்றே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: புனித குர்ஆனில் அதிகாரம் 16, வசனம் 91-ல் எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்களை அவர்கள் நீதியுடன் நடக்க வேண்டும் என்றும் அனைத்து மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்றும் பணிக்கின்றான். எனவே நீங்கள் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாத அந்த மக்களையும் கூட அன்புடன் நடத்திட வேண்டும். உண்மையில், நீங்கள் இதனையும் தாண்டிச் சென்று அவர்களுக்கு நன்மை செய்திட வேண்டும். மேலும் ஒரு தாய் அவளுடைய பிள்ளையை கவனிப்பது போன்று நீங்கள் அவர்களை கவனிக்க வேண்டும். இது எத்தகைய ஓர் அற்புதமான மற்றும் உன்னதமான போதனை! ஒரு தாய் அவளுடைய பிள்ளைகளுக்காகக் கொண்டிருக்கும் தூய்மையான நேசத்தை நாம் அனைவரும் கண்டும், உணர்ந்தும் இருக்கின்றோம்.

ஒரு தாய்க்கு எந்த விதமான கூலிக்கான எதிர்பார்ப்பும் இருக்காது. மேலும் அவள் எந்தவிதமான அங்கீகாரத்தையும் நாட மாட்டாள். எல்லா வேளைகளிலும் அவள் தன்னை நேசிப்பதை விட தன்னுடய பிள்ளையை அதிகமாக நேசிப்பாள். மேலும், அந்த குழந்தைக்கு ஊட்டம் அளிப்பதிலும் தன்னுடைய சந்ததியை பாதுகாப்பதிலும் உள்ள தன்னுடைய உறுதியில் அவள் எப்பொழுதுமே தளர்ந்து விடுவது கிடையாது.

உதாரணமாக அன்னார் இந்தியாவில் 19வது நூற்றாண்டில் முறையான மருத்துவ வசதிகள் அமைந்திருக்காத ஓர் மிகச் சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். எனவே மனித இனத்திற்கு தொண்டு செய்வதற்கான ஆசையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பாரம்பரிய பூர்வீக மருத்துவத்தை கற்றிருந்தார்கள். மேலும், அத்தகைய மருந்துகளின் இருப்பினை தங்களுடைய வீட்டில் வைத்திருந்தார்கள். இதன் விளைவாக உள்ளூர் மக்கள் அன்னாரிடத்தில் வருகை தருவார்கள். மேலும், அவர்களுடைய இனம், மதம் அல்லது நிறத்தினை பொருட்படுத்தாமல் அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப அன்னார் அவர்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்வார்கள். பெரும்பாலான மக்கள் குறிப்பாக ஏழைகளும், தவிப்படைந்த சமூக உறுப்பினர்களும் இந்த ஏற்பாட்டிலிருந்தும் பெருமளவு பயன் அடைந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரே ஆசையும், குறிக்கோளும் மனித இனத்திற்கு சேவையாற்றுவதாகவே இருந்தது. மேலும், இதுவே அன்னார் தம்முடைய சமூகத்திற்கு விட்டுச் சென்ற மகத்தான பொக்கிஷமும், வாரிசுரிமையும் ஆக இருக்கின்றது.

எனவே உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற மனித இனத்திற்கு சேவை செய்வதற்கான அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முயற்சிகள் ஆனது, முழுக்க, முழுக்க மனித இனத்தின் துன்பங்களை நீக்கிட வேண்டும் என்ற ஆசையினாலே உந்தப்பட்டிருக்கின்றது. மேலும், இதன் காரணமாகவே மனிதம் முதலில்(HUMANITY FIRST) இந்த பகுதியில் தனது முதல் மருத்துவ மனையை இன்று திறக்கின்து. அது தன்னுடைய பொறுப்பினை நிறைவேற்றிட வேண்டும். மேலும், மக்களுடைய மத நம்பிக்கைகளை பொருட்படுத்தாமல் அவர்களுடைய வயதினை பொருட்படுத்தாமல் அவர்களுடைய இன மற்றும் சமூகப் பின்புலங்களை பொருட்படுத்தாமல் அது மக்களுடைய துன்பங்களை நீக்கக் கூடிய அசாதாரணமான ஒரு வழிவகையாக தன்னை நிரூபித்திட வேண்டும் என்பதற்காக எனது முழு இதயத்துடன் நான் நம்பிக்கை கொண்டு பிரார்த்தனையும் செய்கிறேன். நான் கூறியது போன்று நாங்கள் எந்தவிதமான கூலியையும், புகழ்ச்சியையும் உலகத்திடம் இருந்து பெறுவதற்கு ஆசைப்படுவதில்லை. எங்களுடைய ஒரே குறிக்கோள் எல்லாம் இறைவனின் நேசமும் அவனுடைய ஆதரவுமே ஆகும்.

நாங்கள் என்றென்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகளால் ஊக்கமளிக்கப்பட்டு இருக்கின்றோம். அன்னார்(அலை) கூறினார்கள்: மனித இனத்திற்கு சேவை செய்வது என்பது நம்முடைய வாழ்வின் உண்மையான நோக்கத்தை நிவேற்றுவது நிறைவேற்றுவதற்கான வழியாகும். மேலும், அது எல்லாம் வல்ல இறைவனின் அருளையும், கொடைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வழியாகும். நான் நம்பிக்கையுடன் இருக்கின்றேன். இப்பொழுது இது உங்களுக்கு தெளிவாகி இருக்கும். அதாவது, நாங்கள் இந்த மருத்துவ மனையை ஓர் இலாபம் அடைவதற்காகவோ அல்லது எங்களுக்கு சாதகமான விளம்பரத்தை அடையவோ கட்டவில்லை. மாறாக, எங்களுடைய ஒரே குறிக்கோள் இந்த நிலத்தின் மக்களுக்கு உயர் தரமான சுகாதாரத்தை வழங்குவதன் மூலம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே.

நான் உங்களுக்கு உறுதி கூறுவது என்னவென்றால், இந்த மருத்து மனையில் சம்பாதிக்கப்படும் நிதியானது இன்னும் இந்த மக்களுக்கு சேவை செய்வதற்காக மட்டுமே உபயோகப்படுத்தப்படும்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்.......

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad